# சிலாங்கூர் இன்று

இலவசம்

SMART SELANGOR

SELANGOR

www.selangorkini.my  Media_Selangor  selangortv.my  MediaSelangor

திருவள்ளுவர் ஆண்டு 2051 / பிலவ ஆண்டு ஆவணி மாதம் / ஆகஸ்ட் 8/2021 AUGUST 8/2021


## தினசரி 150,000க்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி

# இலக்கை தாண்டியது சிலாங்கூர்




ஷா ஆலம் - சிலாங்கூரில் கடந்த இரு நாட்களாக தடுப்பூசி பெற்றவர்கள் எண்ணிக்கை ஒன்றரை லட்சத்தை தாண்டியுள்ளது. இந்த எண்ணிக்கை அதிகரிப்பு மாநில அரசுக்கு கிடைத்த வெற்றி என்று வர்ணித்த மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி, இதன் வழி தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் கடந்த ஜூலை மாதம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு எட்டப்பட்டு விட்டதாக கூறினார்.

தடுப்பூசி பெறுவோரின் தினசரி எண்ணிக்கையை 135,000 ஆக உயர்த்த கடந்த ஜூலை மாதம் இலக்கு நிர்ணயித்திருந்தோம். எனினும், அதையும் தாண்டி கடந்த மாதம் 30 ஆம் தேதி 159,000 பேருக்கும் 31 ஆம் தேதி 152,000 பேருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்றார் அவர்.

சிலாங்கூர் அரசினால் மேற்கொள்ளப்படும் செல்வேக்ஸ் திட்டத்தில் தடுப்பூசி பெறுவோரின் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை எனக் கூறிய அவர், செல்வேக்ஸ் திட்டத்தின் வாயிலாக தினசரி 15,000 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்படுகிறது என்றார்.

தடுப்பூசி திட்டத்தை மிகச் சிறப்பாக மேற்கொண்டு வரும் அனைத்து முன்களப் பணியாளர்களுக்கும் தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் சொன்னார்


நாடாளுமன்றத்தில் நுழைய முயன்ற எம்.பி.க்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்

பக்கம் 5

பள்ளிகளின் நிர்மாணிப்பு , சீரமைப்பு மானியங்கள் இந்திய குத்தகையார்களுக்கு என்பதை வரவேற்கிறோம்

பக்கம் 8

அருள் புரிவதுடன் பக்தர்களுக்கு சேவையாற்றும் கிள்ளான் பண்டார் பார்க்லண்ட்ஸ் முனியாண்டி ஆலயம்

பக்கம் 10

## தடுப்பூசி பெற்றும் நோய்த் தொற்று கண்ட 4,761 முன்களப் பணியாளர்களுக்கு மோசமான பாதிப்பு இல்லை



கோலாலம்பூர் — மொத்தம் 4,761 முன்களப் பணியாளர்களுக்கு தடுப்பூசி பெற்றப் பின்னரும் கோவிட்-19 நோய்த் தொற்று கண்டது. எனினும் அவர்களில் பெரும்பாலோர் நோய்த் தொற்று பாதிப்பு இல்லாதவர்களாக (முதல் நிலை) லேசான பாதிப்புக்கு உள்ளானவர்களாகவும் (இரண்டாம் நிலை) இருந்தனர்.

தடுப்பூசி பெற்ற சுகாதார அமைச்சிலுள்ள 246,242 சுகாதாரப் பணியாளர்களில் 4,761 பேர் நோய்த் தொற்றுக்கு இலக்கானதாக சுகாதாரத் துறையின் ஆய்வு மற்றும் உதவி நுட்ப பிரிவுக்கான துணைத் தலைமை இயக்குநர் டத்தோ டாக்டர் ஹஷிம்ஷா முகமது இப்ராஹிம் கூறினார்.

நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் எட்டு பேருக்கு பாதிப்பு மூன்றாம் நிலையிலும் மூவருக்கு நான்காம் நிலையிலும் இருந்தது. எனினும், தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படும் ஐந்தாம் நிலையை யாரும் அடையவில்லை என்று அவர் சொன்னார்.

நோய்த் தாக்கம் அதிகம் உள்ள சூழலில் முன்களப் பணியாளர்கள் வேலை செய்யும் காரணத்தால் இரண்டு டோஸ் தடுப்பூசிகளைப் பெற்றிருந்தாலும் அவர்கள் நோய்த் தொற்றினால் பாதிக்கப்படும் சாத்தியம் அதிகம் உள்ளது என்றார் அவர்.

நோய்த் தொற்று எளிதில் பீடிக்கும் அபாயம் உள்ள சூழலில் வேலை செய்தாலும் சம்பந்தப்பட்ட முன்களப் பணியாளர்களுக்கு பீடிக்கும் நோய்த் தொற்று கடுமையான விளைவுகளை ஏற்படுத்துவதில்லை என்பதுதான் தடுப்பூசி மூலம் கிடைத்துள்ள அனுகூலமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சிலாங்கூர் இலக்கிய படைப்புக்கான போட்டியில் ஜெயமணி உள்பட 11 பேர் வெற்றி

ஷா ஆலம் – இங்கு நேற்று நடைபெற்ற 2020 சிலாங்கூர் மலாய் இலக்கியப் படைப்புக்கான போட்டியில் மண்ணின் மணம் கமழும் வகையில் படைப்புகளை வெளியிட்ட 11 பேர் வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டனர்.

இந்த இலக்கியப் போட்டியில் சிறுகதைக்கான பிரிவில் நால்வரும் கட்டுரைப் பிரிவில் நால்வரும் கவிதைப் பிரிவில் மூவரும் வெற்றி பெற்றனர். எனினும், ஒட்டுமொத்தப் பிரிவுகளையும் உள்ளடக்கிய பிரதான வெற்றியாளராக யாரும் அறிவிக்கப்படவில்லை.

இப்போட்டியில் Jargon:ketidakjujuran bahasa எனும் தலைப்பில் எழுதிய கட்டுரைக்காக ஜெயமணி சிவநாதன் அப்பிரிவில் முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்போட்டியின் ஒரே இந்திய வெற்றியாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.




டேனியல் காடீர், சைபுல் கசாலி, முகமது நஸ்ரின் சாகூல் ஹமிது ஆகியோர் கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற இதரப் போட்டியாளர்கள் ஆவர்.

சிறுகதைப் பிரிவில் பராஹின் டபள்யு, முகமது பாரிக் கீர், ஜெயா ரம்பா, சைபுல் கசாலி ஆகியோர் முதல் நான்கு இடங்களைப் பெற்றனர்.

கவிதைப் போட்டியில் ஜெட் ஸ்டெல்லாரோஸ், ஜொக் மாலிக், சித்தி ஹலிமா ஆகியோர் பரிசு பெற்றனர்.

இந்த இலக்கியப் போட்டி மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி 2015ஆம் ஆண்டில் கலாசாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்த போது தொடக்கப்பட்டது.

சிலாங்கூர் கினி பத்திரிகையில் பிரசுரமான இந்த படைப்புகள் யாவும் சுயேச்சை நடுவர்களைக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# செல்வேக்ஸ் திட்டத்தின் வழி 90,000 தொழிலாளர்கள் தடுப்பூசி பெற்றனர்






ஷா ஆலம் – தொழிற்சாலை ஊழியர்களை இலக்காக கொண்ட சிலாங்கூர் அரசின் செல்வேக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் திட்டத்தின் கீழ் சுமார் 90,000 பேர் தடுப்பூசி பெற்றனர்.

கடந்த ஜூன் மாதம் 26 ஆம் தேதி தொடங்கிய இந்த தடுப்பூசி திட்டத்தில் இதுவரை 800 தொழிற்சாலைகள் பங்கேற்றுள்ளதாக செல்கேட் ஹெல்த்கேர் நிறுவனத்தின் தலைமை செயல் முறை அதிகாரி நோர் ஹிஷாம் முகமது காவுத் கூறினார்.

இந்த தடுப்பூசி திட்டத்தில் பங்கேற்க 32,000 நிறுவனங்கள் பதிவு செய்துள்ளதாக கூறிய அவர், மேலும் 3,000 நிறுவனங்களின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன என்றார்.

ஜோகூர், பினாங்கு, பேராக், நெகிரி செம்பிலான், மலாக்கா போன்ற மாநிலங்களிலிருந்தும் செல்வேக்ஸ் தடுப்பூசி திட்டத்தில் பங்கேற்க விண்ணப்பம் கிடைத்துள்ளதாகவும் அவர் சொன்னார்.

எனினும், சிலாங்கூர் மாநிலத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதில் முன்னுரிமை அளிக்கப்படும் காரணத்தால் இத்திட்டம் இதர மாநிலங்களுக்கு திறந்துவிடப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தொழிலாளர்களுக்கான செல்வேக்ஸ் திட்டத்தின் கீழ் மாநில அரசு இருபது லட்சம் தடுப்பூசிகளை சிலாங்கூர் அரசு ஒதுக்கியுள்ளது.

# செல்வேக்ஸ் திட்டத்தின் கீழ் 12 தொகுதிகளில் நேரடியாக தடுப்பூசி பெற வாய்ப்பு



ஷா ஆலம் – சிலாங்கூர் மாநில அரசின் செல்வேக்ஸ் கம்யூனிட்டி திட்டத்தின் கீழ் சிலாங்கூர் மாநிலத்திலுள்ள 12 தொகுதிகளில் இம்மாதம் 2 ஆம் தேதி முதல் நேரடியாக தடுப்பூசி பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது.

பொதுமக்கள் தடுப்பூசி பெறுவதை விரைவுபடுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தொகுதிகளில் இந்த நேரடி தடுப்பூசித் திட்டம் அமல்படுத்தப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இத்திட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட தொகுதிகளில் உள்ள தடுப்பூசி மையங்களில் நாளொன்றுக்கு 1,300 தடுப்பூசிகள் வீதம் இரு தினங்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார். கிள்ளான் பள்ளத்தாக்குப் பகுதியில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளை இதன் மூலம் விரைவுபடுத்த முடியும் என அவர் நம்பிக்கைத் தெரிவித்தார். சிலாங்கூர் மாநிலத்தில் தடுப்பூசி இயக்கத்தை விரைவுபடுத்துவதற்காக சிலாங்கூர் மாநில அரசு சுமார் 20 கோடி வெள்ளி செலவில் 25 லட்சம் தடுப்பூசிகளை சொந்தமாக கொள்முதல் செய்துள்ளது.

தொழிற்சாலை ஊழியர்களை உள்ளடக்கிய செல்வேக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் திட்டத்திற்கு 20 லட்சம் தடுப்பூசிகளும் செல்வேக்ஸ் கம்யூனிட்டி எனப்படும் பொது மக்களுக்கான தடுப்பூசித் திட்டத்திற்கு 500,000 தடுப்பூசிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 12 லட்சத்து 50 ஆயிரம் பேர் தடுப்பூசி பெறுவதற்குரிய வாய்ப்பு ஏற்படும். சிலாங்கூரில் நேரடியாக சென்று தடுப்பூசி பெறுவதற்கான வசதி கொண்ட தடுப்பூசி மையங்கள் பின்வருமாறு–

1. Dewan Banting Baru, Morib
2. Dewan Pandan Indah
3. Dewan Majlis Bandar Baru, Kuala Selangor
4. Dewan Dato' Abdul Hamid, Batang Kali
5. Dewan Sekolah Cina, Ijok
6. Dewan Orang Ramai Hulu Bernam
7. Dewan Seri Siantan, Selayang
8. Dewan Sri Cempaka Kajang
9. Dewan Eng Ann, Klang
10. Dewan Komuniti Putra Perdana, Dengkil
11. Dewan MRSM Sungai Besar
12. Dewan MPAJ AU5, Ampang

# அந்நியத் தொழிலாளர்களுக்கு பிரத்தியேக தடுப்பூசி மையங்கள்



கோலாலம்பூர் – தடுப்பூசித் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு ஏதுவாக அந்நியத் தொழிலாளர்களுக்கு மொழி வாரியாக பிரத்தியேக தடுப்புசி செலுத்தும் மையங்களை ஏற்படுத்துவதற்கான சாத்தியத்தை சி.ஐ.டி.எஃப். எனப்படும் கோவிட்-19 தடுப்பூசித் திட்ட சிறப்பு பணிக்குழு ஆராய்ந்து வருகிறது. இத்தகைய பிரத்தியேக மையங்களை ஏற்படுத்துவதன் மூலம் மொழிப் பெயர்ப்பாளர்கள் மற்றும் தொண்டூழியர்களை அங்கு பணியமர்த்த முடியும் என்று அப்பணிக்குழு வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறியது.

மேலும், இந்நடவடிக்கையின் வாயிலாக தடுப்பூசி செலுத்தும் மையங்களில் அதிக எண்ணிக்கையிலானோர் ஒரே சமயத்தில் கூடுவதையும் அதனால் எஸ்.ஓ.பி. விதிமீறல் சம்பவங்கள் நிகழ்வதையும் தடுக்க முடியும் என்று அது குறிப்பிட்டது. பாரங்களைப் பூர்த்தி செய்வதிலும் மைசெஜாத்ரா செயலியை பதிவிறக்கம் செய்வதிலும் அந்நிய நாட்டினர் காட்டும் தாமதப் போக்கு தடுப்பூசி செலுத்தும் பணியை சுணக்கம் காணச் செய்கிறது என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாரத்தை பூர்த்தி செய்ய ஒவ்வொரு தொழிலாளரும் ஐந்து நிமிட நேரத்தை எடுத்துக் கொள்கிறார். இதனால் பதிவு செய்யும் முகப்பிடத்தில் தாமதம் ஏற்படுகிறது. மொழிப்பெயர்ப்பாளர்கள் உதவி செய்த போதிலும் இத்தகைய தாமதங்களைத் தவிர்க்க இயலவில்லை எனவும் அது கூறியது. கிள்ளான் பள்ளத்தாக்கிலுள்ள பல தடுப்பூசி செலுத்தும் மையங்களில் கடும் நெரிசல் நிலவுவதாக வெளிவந்த தகவல்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் சி.ஐ.டி.எஃப். இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

# தொழிலாளர்கள் தடுப்பூசி பெறுவதில் செல்வேக்ஸ் திட்டம் பேருதவி



ஷா ஆலம் – சிலாங்கூர் அரசின் செல்வேக்ஸ் தடுப்பூசித் திட்டம் மாநில மக்கள் தடுப்பூசி பெறுவதை விரைவுபடுத்தி நோய்த் தொற்றிலிருந்து விடுபட்ட சமுதாயத்தை உருவாக்குவதில் துணை புரிகிறது.

உதாரணத்திற்கு, செல்வேக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் எனப்படும் தொழில்துறையினருக்கான தடுப்பூசித் திட்டத்தின் வாயிலாக முதலாளிகள் அல்லது நிறுவனங்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு தடுப்பூசி பெறும் நடவடிக்கையை விரைவுபடுத்த உதவியுள்ளதாக தொழில் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார்.

ஆகவே, தொழில்துறையினருக்கு தடுப்பூசியை விற்பனை செய்வதன் மூலம் சிலாங்கூர் அரசு லாபம் ஈட்ட முயல்வதாக தஞ்சோங் காராங் நாடாளுமன்ற உறுப்பினர் டான்ஸ்ரீ நோர் ஓமார் கூறுவதில் உண்மை இல்லை என்று அவர் சொன்னார்.

இந்த தடுப்பூசித் திட்டத்தை வழி நடத்தும் நிறுவனமான செல்கேட் ஹெல்த்கேர் தடுப்பூசி மையங்களை தயார் செய்வது, பணியாளர்களை நியமிப்பது மற்றும் தடுப்பூசியை செலுத்துவது உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

தடுப்பூசியை நாங்கள் தனியார் துறைக்கு விற்பதாக இருந்தால் அதனை வாங்கும் தொழிற்சாலைகள் அல்லது நிறுவனங்கள் தடுப்பூசியை செலுத்துவதற்கு தனியார் கிளினிக்குகளின் உதவியை நாட வேண்டிய அவசியம் ஏற்படும். ஆனால் எங்களின் செல்வேக்ஸ் திட்டத்தின் மூலம் தொழிலாளர்கள் தடுப்பூசியை பெறுவதற்காக சம்பந்தப்பட்ட மையத்திற்கு வந்தால் போதுமானது என்றார் அவர்..

தடுப்பூசியை தொழில்துறையினருக்கு விற்பனை செய்வதன் மூலம் சிலாங்கூர் அரசு லாபம் ஈட்ட முயல்வதாக நாடாளுமன்றத்தில் நோ ஓமார் குற்றஞ்சாட்டியிருந்தது தொடர்பில் டத்தோ தெங் இவ்வாறு குறிப்பிட்டார்.

# ஊழலில் ஈடுபட்டவர்களின் விருதுகள் பறிக்கப்படும் சுல்தான் எச்சரிக்கை!



ஷா ஆலம் – ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கண்டு பிடிக்கப்படும் அரசாங்க அதிகாரிகள் அல்லது அரசியல்வாதிகளின் பட்டங்கள் அல்லது உயரிய விருதுகள் பறிமுதல் செய்யப்படும் என்று மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் எச்சரித்துள்ளார்.

ஊழல் நடவடிக்கைகள் மாநிலத்திலுள்ள ஒட்டுமொத்த அரசாங்க அதிகாரிகளின் நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்தும் என்பதால் இத்தகைய கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் கூறினார்.

மாநிலத்திலுள்ள அரசாங்க அதிகாரிகள் யாரேனும் ஊழலில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளையில் குற்றத்தின் தன்மைக்கேற்ப கடுமையான தண்டனையும் வழங்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

சிலாங்கூர் மாநில அரசின் பட்டங்கள் அல்லது உயரிய விருது பெற்றவர்களுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்களின் விருதுகள் பறிமுதல் செய்யப்படும் என்றார் அவர்.

சுல்தான் அவர்களின் சிறப்பு அதிகாரி டத்தோ லீலா பக்தி டத்தோ முகமது முனீர் பானி இந்த அறிக்கையை வெளியிட்டார்.

ஊழல் புகார் தொடர்பில் மாவட்ட அதிகாரிகள் உள்பட மாநில அரசு அதிகாரிகள் சிலர் ஊழல் தடுப்பு ஆணைய அதிகாரிகளால் விசாரணைக்காக அண்மையில் தடுத்து வைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊராட்சி மன்ற மின்சுடலைகள் இனி மாலை 6.30 மணி வரை செயல்படும்



ஷா ஆலம் – மூன்று ஊராட்சி மன்றங்களின் நிர்வாகத்தின் கீழ் செயல்படும் மின்சுடலைகள் இனி மாலை 6.30 மணி வரை செயல்படும். தற்போது அந்த மின்சுடலைகள் மாலை 4.30 மணி வரை மட்டுமே இயங்கி வருகின்றன.

கோவிட்-19 நோய்த் தொற்றினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு ஷா ஆலம் மாநகர் மன்றம், சுபாங் ஜெயா மாநகர் மன்றம் மற்றும் கிள்ளான் நகராண்மைக் கழகம் ஆகிய ஊராட்சி மன்றங்களின் கீழ் செயல்படும் அந்த மூன்று மின்சுடலைகளிலும் பணி நேரம் நீடிக்கப்பட்டுள்ளதாக பரிவுமிக்க அரசாங்கத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் கூறினார்.

அண்மையில் அந்த மூன்று ஊராட்சி மன்றங்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பில் இந்த பணி நேர அதிகரிப்பு தொடர்பில் இணக்கம் காணப்பட்டதாக அவர் சொன்னார்.

கோவிட்-19 பெருந்தொற்று அதிகரிப்பு காரணமாக இந்தியர்கள் உள்பட அனைத்து நிலையிலான மக்கள் மத்தியிலும் மரண எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மின்சுடலைகளில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடி காரணமாக இறந்தவர்களின் உடல்களை முறையாக தகனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் ஊராட்சி மன்றங்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பின் பயனாக மின்சுடலைகளில் பணி நேரம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மருத்துவமனை சவக்கிடங்குகளில் தேங்கியிருக்கும் பிரேதங்களை விரைந்து தகனம் செய்வதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

இதனிடையே, சவக்கிடங்கில் காத்திருக்கும் இந்துக்களின் உடல்களை இடுகாட்டில் நல்லடக்கம் செய்வது தொடர்பான பரிந்துரையை தமது தரப்பு காய்ஸ் எனப்படும் சிலாங்கூர் இந்தியர் நல்லடக்கச் சடங்கு சமூக நல சங்கத்திடமிருந்து பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரேதங்களை நல்லடக்கம் செய்வதற்கு போதுமான இடமும் அந்த பணியை மேற்கொள்வதற்கு காய்ஸ் சங்கம் தயாராகவும் இருக்கும் போது எதற்காக பிரேதங்களை தகனம் செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று அச்சங்கத்தின் தலைவர் கருதுவதாகவும் கணபதிராவ் கூறினார்.

காய்ஸ் சங்கத்தின் இந்த கருத்தை சிலாங்கூரிலுள்ள பல மயான பரிபாலன சங்கங்கள் ஏற்றுக் கொண்டுள்ளதோடு இவ்விவகாரத்தில் அச்சங்கத்துடன் இணைந்து செயல்படவும் தயாராக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# லேசான அறிகுறி இருந்தால் சி.ஏ.சி. மையத்திற்கு செல்ல வேண்டாம்



ஷா ஆலம் – லேசான அறிகுறி கொண்ட அல்லது அறிகுறி இல்லாத கிள்ளான் பள்ளத்தாக்கு பகுதியைச் சேர்ந்த கோவிட்-19 நோயாளிகள் கோவிட்-19 மதிப்பீட்டு மையத்திற்கு (சி.ஏ.சி.) செல்ல வேண்டாம் என வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

சிலாங்கூர், கோலாலம்பூர் மற்றும் புத்ராஜெயாவில் வசிக்கும் இத்தகைய நோயாளிகள் வீட்டிலேயே தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இத்தகைய நோயாளிகள் உடனடியாக மற்றவர்களிடமிருந்து விலகியிருக்க வேண்டும் என்பதோடு தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளவும் வேண்டும் அது தனது டிவிட்டர் பதிவில் கூறியது.

லேசான அறிகுறி கொண்ட நோயாளிகள் சி.ஏ.சி. மையங்களுக்கு வரவேண்டாம் என கடந்த 27ஆம் தேதி கேட்டுக் கொண்ட சுகாதார அமைச்சு, இத்தகைய நோயாளிகள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளையும் பட்டியலிட்டிருந்தது.

-கோவிட்-19 பரிசோதனை முடிவுகளை மைசெஜாத்ரா செயலி வழி தெரிவிக்க வேண்டும்

– வீட்டிலிருந்து மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு குறித்து இலக்கவியல் வாயிலாக உத்தரவு பிறப்பிக்கப்படும்

– வீட்டிலிருந்து உடல் நிலையை சோதிக்கும் கருவிகள் வழி கண்டறியும் முடிவுகளை மைசெஜாத்ரா செயலி வழி தெரிவிக்க வேண்டும்.

– நோயாளியை சி.ஏ.சி. மையம் இணையம் வாயிலாக கண்காணிக்கும். தேவை ஏற்பட்டால் நேரில் தொடர்பு கொள்ளும்.

– நோயாளிகள் சோதனைக்காக அருகிலுள்ள சி.ஏ.சி. மையங்களுக்கு வரவேண்டிய அவசியம் இருப்பின் மைசெஜாத்ரா செயலி வழி அல்லது தொலைபேசி அழைப்பின் வழி தெரிவிக்கப்படும்.

– உதவி தேவைப்படும் நோயாளிகள் 03-77239299 என்ற எண்களில் (காலை 8.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை) அல்லது 03- 7723 9300 (காலை 8.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை) தொடர்பு கொள்ளலாம்.

– நோயின் தாக்கம் கடுமையாக இருப்பின், நோயாளிகள் உடனடியாக மருத்துவமனைக்கு செல்ல வேண்டும்.

# அனுமதியின்றி அவசரகாலம் நீக்கம்
# பேரரசர் வருத்தம்

கோலாலம்பூர் — இம்மாதம் 26 ஆம் தேதி வெளியிட்ட ஓர் அறிக்கையின் வாயிலாக அனைத்து அவசரகாலச் சட்டங்களையும் ரத்து செய்த அரசாங்கத்தின் செயல் குறித்து மாட்சிமை தங்கிய பேரரசர் தனது ஆழ்ந்த வருத்தத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த அவசரகாலச் சட்டங்களை ரத்து செய்வதற்கு தன்னிடம் ஒப்புதல் பெறப்படவில்லை என்பதையும் பேரரசர் அல்-சுல்தான் அப்துல்லா ரியாத்துடின் அல்-முஸ்தாபா பில்லா ஷா சுட்டிக் காட்டியுள்ளார்.

இஸ்தானா நெகாராவின் அரச விவகாரங்களுக்கான பொறுப்பதிகாரி டத்தோ இண்ட்ரா அகமது பாடில் சம்சுடின் அறிக்கை ஒன்றில் வாயிலாக இதனைத் தெரிவித்தார்.

மாமன்னர் அங்கீகாரம் அளித்த அனைத்து அவசரகாலச் சட்டங்களையும் அரசாங்கம் ரத்து செய்யப்பட்டு விட்டதாக கடந்த 26 ஆம் தேதி அரசாங்கம் வெளியிட்ட அறிக்கை குறித்து மாமன்னர் மிகுந்த வருத்தத்தை தெரிவித்துள்ளார் என்று டத்தோ இண்ட்ரா அகமது கூறினார்.



அவசரகாலம் ரத்து செய்யப்படுவது தொடர்பான அனைத்து பரிந்துரைகளும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும் என கடந்த 24 ஆம் தேதி நாடாளுமன்றம் மற்றும் சட்ட விவகாரங்களுக்கான அமைச்சர் டத்தோஸ்ரீ தக்கியுடின் ஹசான் மற்றும் தேசிய சட்டத் துறைத் தலைவர் இட்ருஸ் ஹருண் ஆகியோருடன் தாம் நடத்திய சந்திப்பின் போது எடுக்கப்பட்ட முடிவு அமல் செய்யப்படாதது குறித்தும் மாமன்னர் ஏமாற்றம் தெரிவித்துள்ளதாக அவர் சொன்னார்.

பிரதமர் துறை அமைச்சர் தக்கியுடின் கடந்த 26 ஆம் தேதி வெளியிட்ட அறிக்கை சரியானது அல்ல என்பதோடு நாடாளுமன்ற உறுப்பினர்களை குழப்பும் வகையிலும் உள்ளது என்று மாமன்னர் உறுதிபடத் தெரிவித்துள்ளார் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்- அன்வார் தாக்கல்




கோலாலம்பூர் — பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் இன்று மக்களையில் தாக்கல் செய்தார். அரசியலமைப்புச் சட்டத்திற்கேற்ப பாகோ நாடாளுமன்ற உறுப்பினருமான டான்ஸ்ரீ மொகிடின் யாசின் பிரதமர் பதவியிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்று அவை உறுப்பினர்கள் சார்பாக தாம் வலியுறுத்துவதாக அன்வார் தெரிவித்தார்.

அவசரகாலம் தொடர்பான அனைத்துச் சட்டங்களும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படாமல் அவசர கதியில் அகற்றப்பட்டுள்ளதை அவை உறுப்பினர்கள் மற்றும் மாட்சிமை தங்கிய பேரரசர் அல்-சுல்தான் அப்துல்லா ரியாத்துடின் அல்-முஸ்தாபா பில்லா ஷா அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட முரண்பட்ட மற்றும் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலான அறிக்கை நீதி பரிபாலன முறையை மதிக்காத போக்கை காட்டுவதோடு நாட்டின் முதன்மை தலைவராக விளங்கும் மாமன்னரின் பொறுப்பு மற்றும் அதிகாரத்தை புறந்தள்ளும் வகையிலும் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார். டான்ஸ்ரீ மொகிடின் தவிர்த்து நாடாளுமன்றம் மற்றும் சட்ட விவகாரங்களுக்கான பிரதமர் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ தக்கியுடன் ஹசான் மற்றும் தேசிய சட்டத்துறைத் தலைவர் டத்தோ அஸார் அஜிசான் ஆகியோரும் பதவி துறக்க வேண்டும் என்று அன்வார் வலியுறுத்தினார்.

## நாடாளுமன்றத்தில் நுழைய முயன்ற எம்.பி.க்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்



கோலாலம்பூர் – நாடாளுமன்றத்தில் நுழையும் நோக்கில் ஊர்வலமாகச் சென்ற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

நேற்று நாடாளுமன்றக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதை கண்டிக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று காலை 9.50 அளவில் மெர்டேக்கா சதுக்கத்திலிருந்து நாடாளுமன்றக் கட்டிடம் நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். பிரதமர் டான்ஸ்ரீ மொகிடின் யாசின் நிர்வாகத்தை கண்டிக்கும் வகையிலான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

மாட்சிமை தங்கிய பேரரசரின் உத்தரவுபடி அவசரகாலச் சட்ட ரத்து தொடர்பான விவகாரம் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவிருந்தது. எனினும் கோவிட்-19 நோய்த் தொற்று பரவலைக் காரணம் காட்டி அந்த கூட்டம் ரத்து செய்யப்பட்டது.

மெர்டேக்கா சதுக்கத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசிய டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம், மக்களவை சபாநாயகர் தனது கடமையிலிருந்து தவறிவிட்டதோடு பிரதமராக பதவி வகிப்பதற்கான தகுதியை இழந்து விட்ட மொகிடின் யாசினை காப்பாற்ற முயல்வதாக குற்றஞ்சாட்டினார்.

முன்னாள் பிரதமரும் பெஜுவாங் கட்சியின் தலைவருமான துன் டாக்டர் மகாதீர் முகமதுவும் உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றினார்.

உறுப்பினர்கள் நாடாளுமன்றம் நோக்கிச் செல்வதைத் தடுப்பதற்காக எஃப்.ஆர்.யு. எனப்படும் மத்திய சேமப்படையினர் சாலையில் அரண் அமைத்திருந்தனர்.

காலை 11.00 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் களைந்து சென்றனர். இந்த பேரணியில் 107 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டதாக அன்வார் கூறினார்.

# செர்டாங் மருத்துவமனை கோவிட்-19 சிகிச்சை மையமாக மாற்றம்

ஷா ஆலம் – செர்டாங் மருத்துவமனை முழு கோவிட்-19 நோயாளிகளுக்கான மருத்துவமனையாக மாற்றப்பட்டுள்ளது. சிலாங்கூரில் கோவிட்-19 மருத்துவமனையாக தகுதி மாற்றம் செய்யப்பட்ட நான்காவது மருத்துவமனை இதுவாகும். இந்த மருத்துவமனையை தகுதி மாற்றம் செய்வது தொடர்பான முடிவை கிள்ளான் பள்ளத்தாக்கு பொது சுகாதார நடவடிக்கை குழு நேற்று முன்தினம் எடுத்ததாக துணை சுகாதார தலைமை இயக்குநர் டத்தோ டாக்டர் சோங் சீ கியோங் கூறினார். கிள்ளான் பள்ளத்தாக்கு பகுதியில் கோவிட்-19 பெருந்தொற்று அபரிமிதமாக அதிகரிக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து செர்டாங் மருத்துவமனையின் இருதய சிகிச்சை சேவை இதர மருத்துவமனைகளுக்கு





மாற்றப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். கோவிட்-19 நோயாளிகளுக்கு குறிப்பாக கடும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளவர்களுக்கு சிகிச்சையளிக்கும் பணியை சீராக மேற்கொள்ள இந்நடவடிக்கை பெரிதும் துணை புரியும் என்று அவர் சொன்னார். சுங்கை பூலோ மருத்துவமனை கோவிட்-19 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் பிரத்தியேக மருத்துவமனையாக கடந்தாண்டு ஆகஸ்டு மாதம் 23ஆம் தேதி மாற்றப்பட்டது. அம்பாங் மருத்துவமனையை கோவிட்-19 நோயாளிகளுக்கான மருத்துவமனையாக மாற்ற சிலாங்கூர் மாநில சுகாதார இலாகா கடந்த 23 ஆம் தேதி முடிவெடுத்தது. அதனைத் தொடர்ந்து இம்மாதம் 21 ஆம் தேதி செலாயாங் மருத்துவமனையும் கோவிட்-19 மருத்துவமனையாக தகுதி மாற்றம் செய்யப்பட்டது.

## நாடாளுமன்றக் கட்டிடத்தில் அனைத்துக் கூட்டங்களையும் ஒத்தி வைக்க வேண்டும்



கோலாலம்பூர் – நாடாளுமன்றக் கட்டிடத்தில் நடைபெறக் கூடிய கூட்டத் தொடர், தேர்வுக் குழு மற்றும் நாடாளுமன்ற சிறப்புத் தேர்வுக் குழு உள்ளிட்ட அனைத்து கூட்டங்களும் கடந்த மாதம் 29 ஆம் தேதி தொடங்கி இரு வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்று சுகாதாரத் துறை தலைமை இயக்குநர் டான்ஸ்ரீ டாக்டர் நோர் வலியுறுத்தியுள்ளார்.
நடப்பு இடர் மதிப்பீட்டின் அடிப்படையிலும் தற்போது நாடாளுமன்றத்தில் பரவி வரும் கோவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கத்திலும் இந்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளதாக அவர் சொன்னார்.
நாடாளுமன்றத்தில் இடர் மதிப்பீடு தொடர்பான ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கடந்த மாதம் 26 ஆம் தேதி நாடாளுமன்றக் கட்டிடத்தில் இருந்த அனைவரும் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு மைசெஜாத்ரா செயலி வாயிலாக உடல் நிலை குறித்து பதிவு செய்ய வேண்டும் என்பதோடு நோய்க்கான அறிகுறி தென்படும் பட்சத்தில் உடனடியாக சிகிச்சை பெற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.
நாடாளுமன்றக் கட்டிடத்தில் கோவிட்-19 நோய்த் தொற்று பரவுவதற்கு பல்வேறு அம்சங்கள் காரணமாக விளங்குவதாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்தார்.
முழுமையாக மூடப்பட்டிருக்கும் கட்டிடத்தின் வடிவமைப்பு நோய்த் தொற்றுக்கான சாத்தியத்தை அதிகரிக்கும் எனக் கூறிய அவர், பல மணி நேரத்திற்கு காற்று நிலையாக இருக்கும் இடத்தில் சார்ஸ் கோவி-2 வைரஸ் எளிதில் பரவுவதற்கான சாத்தியம் அதிகம் உள்ளது என்றார்.

## கிள்ளான் மருத்துவமனை கூடுதல் நிபுணர்கள், உபகரணங்கள் கிடைக்கும்



கிள்ளான் – கிள்ளான், துங்கு அம்புவான் ரஹிமா மருத்துவமனை கூடுதல் மருத்துவ நிபுணர்களையும் ஆக்சிஜன் மற்றும் வெண்டிலேட்டர் சாதனம் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களையும் விரைவில் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.
நேற்று மாலை அம்மருத்துவமனைக்கு மேற்கொண்ட திடீர் வருகையின் போது சுகாதார அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஆடாம் பாபா பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் இந்த கூடுதல் அனுகூலங்கள் கிடைப்பதற்குரிய சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் சந்தியாகோ கூறினார். அம்மருத்துவமனைக்கு திடீர் வருகை புரிந்து நிலைமையை நேரில் கண்டறிந்ததற்காக அமைச்சர் அடாம் பாபாவுக்கு நன்றி தெரிவித்துக் கொண்ட சார்ல்ஸ், இந்த வருகையின் போது அமைச்சர் பிறப்பித்த அனைத்து உத்தவுகளும் வாக்குறுதிகளும் இரு வாரங்களுக்குள் நிறைவேற்றப்படும் என தாம் பெரிதும் எதிர்பார்ப்பதாகக் கூறினார். இந்த வருகையின் போது அமைச்சர் இரண்டு மணி நேரத்தை மருத்துவமனையில் செலவிட்டு நோயாளிகள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடியதோடு மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகளையும் நேரில் பார்வையிட்டதாக அவர் சொன்னார். அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்த நோயாளிகள் சிலர் தாங்கள் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக உணவு இன்றி இங்கு காத்திருப்பதாக அமைச்சரிடம் கூறினர். தங்களுக்கு உணவு கிடைத்ததாக ஒரு சிலர் கூறிய போதிலும் அனைவருக்குமாக சேர்த்து 400 பொட்டலங்களை ஏற்பாடு செய்ய அவர் உத்தரவிட்டார் என சார்ல்ஸ் மேலும் தெரிவித்தார். இரு தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் தமக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக கிள்ளான் மருத்துவமனைக்கு திடீர் வருகை புரிந்து நிலைமையை நேரில் கண்டறிந்த அமைச்சர் ஆடாம் பாபாவுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என தனது முகநூல் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மாமன்னர் மட்டுமே அவசரகாலத்தை ரத்து செய்ய முடியும்
# அமைச்சரவைக்கு அந்த அதிகாரம் இல்லை



ஷா ஆலம் – அவசரகாலச் சட்டத்தை ரத்து செய்யும் அதிகாரம் மாமன்னருக்கு மட்டுமே உள்ளது. அமைச்சரவைக்கு அந்த அதிகாரம் கிடையாது என்று வழக்கறிஞர் ஹனிபா மைடின் கூறினார்.

நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 150(3)இன் கீழ் அவசரகாலச் சட்டத்தை ரத்து செய்யும் அதிகாரத்தை மாமன்னர் கொண்டுள்ளார். காரணம், இச்சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் 150(2பி) பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது என்று அவர் சொன்னார்.

இந்த ரத்து நடவடிக்கை மாமன்னரின் கையெழுத்தின் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்டு அல்லது உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். பின்னர் அது அரசாங்க பதிவேட்டில் இடம் பெற வேண்டும். அதற்கு பின்னரே அவசர காலச் சட்டம் சட்டப்பூர்வமாக ரத்து செய்யப்பட்டதாக பொருள்படும் என்று அவர் தெளிவுபடுத்தினார்.

இந்த அவசரகாலச் சட்ட ரத்து நடவடிக்கை இன்னும் அரசாங்கம் பதிவேட்டில் இடம் பெறவில்லை என தமக்கு தெரியவந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது உண்மையென்றால், அவசரகாலத்தை ரத்து செய்வதற்கு மாமன்னரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதை நிருபிப்பதில் பெரிக்காத்தான் நேஷனல் அரசாங்கம் தோல்வி கண்டு விட்டது என்பது பொருளாகும் என்றார் அவர்.

வரும் ஆகஸ்டு மாதம் 1ஆம் தேதி முடிவுக்கு வரவிருந்த அவசரகாலச் சட்டம் ஜூலை 21 ஆம் தேதியே மீட்டுக் கொள்ளப்பட்டதாக நாடாளுமன்றம் மற்றும் சட்ட விவகாரங்களுக்கான பிரதமர் துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ தக்கியுடின் ஹசான் நேற்று நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்.

அமைச்சரின் இந்த அறிவிப்பு நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதோடு, அரசாங்கத்தின் இந்நடவடிக்கை குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர்.

# சிலாங்கூர் அரசின் அதிகார வரம்பு
## விஷயத்தில் அரசாங்கத்தின் முரண்பட்ட போக்கு



கோலாலம்பூர் – அவசரகாலத்தின் போது சிலாங்கூர் அரசின் அதிகார வரம்பு தொடர்பில் மத்திய அரசு கடைபிடித்த முரண்பட்ட போக்கு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார்.

அனைத்து அதிகாரங்களும் தேசிய பாதுகாப்பு மன்றத்திற்கே உள்ளதாக துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் முன்னர் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இப்போது அதிலிருந்து முரண்படுகிறார். அப்படியென்றால் சிலாங்கூர் அரசு அவசரகாலத்தை மீறி விட்டதாக பொருள்படுமா? இவ்விவகாரம் தொடர்பில் நான் துணைப் பிரதமரிடமிருந்து விளக்கம் கோருகிறேன் என்று அவர் சொன்னார்.

இன்று தொடங்கி நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றிய போது போர்ட்டிக்சன் நாடாளுமன்ற உறுப்பினருமான அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கு முன்னர் கோவிட்-19 நோய்த் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக சிலாங்கூரில் உள்ள தொழிற்சாலைகளை மூடுவதற்கு ஊராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுத்த போது அதிகார வரம்பு பிரச்னை வெடித்தது.

நோய்த் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக அத்தியாவசியமில்லாத தொழில் துறைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி மாநில அரசு வலியுறுத்தியதாகவும் எனினும், இவ்விவகாரத்தில் மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் வழக்கறிஞர் ஷியாரேட்சான் ஜோஹான் கூறியிருந்தார்.

# பிரதமர் பதவி விலக வேண்டும்
## சிலாங்கூர் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து



ஷா ஆலம் – நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படாமல் அவசர காலச் சட்டங்கள் ரத்து செய்யப்பட்டது குறித்து மாட்சிமை தங்கிய பேரரசர் தனது அதிருப்தியை வெளியிட்டதைத் தொடர்ந்து பிரதமர் பதவியிலிருந்து டான்ஸ்ரீ மொகிடின் யாசின் விலக வேண்டும் என்று சிலாங்கூர் எதிர்க்கட்சித் தலைவர் ரிஸாம் இஸ்மாயில் வலியுறுத்தியுள்ளார்.

மாமன்னரின் உத்தரவை மொகிடின் தலைமைத்துவம் வேண்டுமென்றே புறக்கணித்துள்ளதோடு மீறியும் உள்ளதாக அரண்மனை வெளியிட்ட அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று அவர் சொன்னார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 150(3) பிரிவுக்கேற்ப வாக்கெடுப்பு நடத்துவதற்கு ஏதுவாக அனைத்து அவசரகாலச் சட்டங்களையும் ரத்து செய்வது தொடர்பான பரிந்துரை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று மாமன்னர் தெளிவாக கூறியுள்ளதையும் ரிஸாம் சுட்டிக் காட்டினார்.

மாட்சிமை தங்கிய பேரரசருக்கு விசுவாசமாக இருப்பதற்கும் அரசியலமைப்புச் சட்டத்தை மதித்து நடப்பதற்கும் பதவியேற்கும் போது செய்து கொண்ட உறுதி மொழியை பிரதமர் மீறி விட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்விவகாரத்தில் தேசிய அம்னோ இளைஞர் பிரிவின் நிலைப்பாட்டிற்கேற்ப சிலாங்கூர் மாநில எதிர்க்கட்சியினரின் நிலைப்பாடும் அமைந்துள்ளதாக மாநில அம்னோ இளைஞர் பிரிவுத் தலைவருமான அவர் மேலும் சொன்னார்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakiyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat,**
**No. 1, Jalan Indah 14/ 8,**
**Seksyen 14, 40000 Shah Alam,**
**Selangor**
*Tel: 03-55234856*
*Faks:03-55235856*
*Email: info@mediaselangor.com*

# மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி மாநாட்டு மையம் கண்ட முதல் கல்விக் கூடம்

ஷா ஆலம், நகரின் செக்சன் 7 என்றவுடன் நமது நினைவுக்கு வருவது அதிநவீன ஐ-சிட்டி நகர், விண்ணை முட்டும் கட்டிடங்கள், வணிக மையங்கள்தான். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த இடத்தின் பெயர் மிட்லண்ட்ஸ் தோட்டம் என்பதும் பாட்டாளி மக்களின் வாழ்வாதாரமாக இவ்விடம் விளங்கியதும் பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. 90ஆம் ஆண்டுகளில் மேம்பாடு என்ற பெயரில் தோட்டத்தின் இயற்கை அழகு சிதைக்கப்பட்டது. இங்கு தோட்டம் இருந்ததற்கான அடையாளத்தை காலம் அழித்து விட்டது. தமிழன் வாழ்ந்தான் என்பதற்கு ஆதாரமாக ஆலயம் மற்றும் தமிழ்ப்பள்ளியே உண்டு

## மாநாட்டு மையத்துடன் அனைத்து வசதிகளும் கொண்ட அழகிய பள்ளி

பல்வேறு இன்னல்களைத் தாண்டி மாநாட்டு மையத்துடன் அனைத்து வசதிகளும் கொண்ட அழகிய பள்ளியாக காட்சியளிக்கிறது மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி. இப்பள்ளியின் வளர்ச்சிக்கு பள்ளி மேலாளர் வாரியம், பெ.ஆ.சங்கம், அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள், சிலாங்கூர் மாநில அரசு உள்பட பல்வேறு தரப்பினரின் அளப்பரிய பங்களிப்புதான் காரணம் என்றால் அது மிகையில்லை. தோட்ட மேம்பாடு காரணமாக ஏற்கனவே நான்கு முறை இடமாற்றம் கண்டது. இந்நிலையில் செக்சன் 7 இல் உள்ள ஐ-சிட்டி நகரில் பள்ளிக்கு 4 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. குடியிருப்புகளுக்கு அதிக தொலைவில் இருந்தது மற்றும் அது முன்னாள் இடுகாட்டு நிலம் ஆகிய காரணங்களால் அந்நிலத்தை நிராகரிப்பதென முடிவெடுக்கப்பட்டது என குறிப்பிட்டார் பள்ளி மேலாளர் வாரிய பொருளாளர் சி.சுப்பையா.

## ஆட்சி மாற்றம் பள்ளியின் வளர்ச்சிக்கு சாதகமான சூழலை உருவாக்கியது

2008ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் பள்ளியின் வளர்ச்சிக்கு சாதகமான சூழலை உருவாக்கியது. பள்ளி அமைந்துள்ள இடத்தில் புதிய கட்டிடத்தை கட்டுவது என தீர்மானிக்கப்பட்ட வேளையில் ஐ-சிட்டி நிறுவனம், அந்த நான்கு ஏக்கர் நிலத்தையும் எடுத்துக் கொள்ள மாநிலத்தின் மிக முக்கிய பிரமுகரிடமிருந்து சிபாரிசு கடித்தம் ஒன்றை மாநில அரசிடம் சமர்பித்தது. பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட நிலம் முற்றாக கைநழுவிய நேரத்தில், சில தலைவர்களின் சமயோகிததால் மாற்று இடமும் நிதியும் பெறப்பட்டது. 2010ஆம் ஆண்டு மிட்லண்ட்ஸ் பள்ளிக்கு தற்போதுள்ள அதே இடத்தில் நான்கு ஏக்கர் நிலமும் பள்ளி நிலத்தை ஐ-சிட்டி நிறுவனம் மீண்டும் எடுத்துக் கொள்ள பள்ளியை சீரமைத்துதர முன்வந்த நிறுவனத்திடம், இழப்பீடாக மாற்று கட்டத்திற்கான வரைபடம் வழங்கப்பட்டது, அதனை நிர்மாணிக்க ஏற்படும் செலவை கட்டுமான துறையினர் அன்றைய கட்டுமான விலை அடிப்படையில் 30 லட்சம் வெள்ளியும் வழங்க ஒப்புதல் தரப்பட்டது. இதனைத் தொடர்ந்து புதிய பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த 2011ஆம் ஆண்டு ஏப்ரல் நடத்தப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன. இப்பள்ளியை அப்போதைய மந்திரி புசார் டான்ஸ்ரீ காலிட் இப்ராஹிம் கடந்த 2012ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் தேதி அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்ததாகக் கூறிய சுப்பையா, பள்ளி மேலாளர் வாரியத்தின் சார்பாக மாணவர்களுக்கு இலவச காலைச் சிற்றுண்டி வழங்குவது உள்பட பல்வேறு நலத் திட்டங்களை அமல்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

## மாநில அரசின் மானியம்

சிலாங்கூர் மாநில அரசின் சார்பில் இது வரை 2 லட்சத்து 80 ஆயிரம் வெள்ளியை இப்பள்ளி மானியமாக பெற்றுள்ளதாக இளங்கோ கூறினார். தமிழப்பள்ளிகளின் குறிப்பாக மிட்லண்ட்ஸ் பள்ளியின் வளர்ச்சியில் மாநில அரசு கொண்டுள்ள அக்கறையை இந்த நிதியுதவி புலப்படுத்துகிறது என்று அவர் சொன்னார்.


பள்ளியின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் கடந்த மூன்று ஆண்டுகளாக தலா 50,000 வெள்ளியை மானியமாக வழங்கி வரும் மாநில அரசுக்கு பள்ளியின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிதியைக் கொண்டு மாணவர்களின் கல்வி மேம்பாடு, விளையாட்டுப் பயிற்சி, அடிப்படை வசதிகளை தரம் உயர்த்துவது உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தாங்கள் மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

பதிமூன்று வகையான அடிப்படை வசதி மற்றும் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள இந்த நிதி பேருதவியாக இருந்துள்ளது. 16 ஆசிரியர்களுடன் 155 மாணவர்களைக் கொண்டு இயங்கும் இப்பள்ளி கல்வியிலும் புறப்பாட நடவடிக்கைகளிலும் மேலும் பல சாதனைகளைப் புரிவதற்கு திட்டங்களைத் தீட்டி செயல்பட்டு வருகிறது என்றார் அவர்.

## மிட்லண்ட்ஸ் தோட்ட தமிழ்ப்பள்ளி வரலாறு

மேம்பாடு என்றால் தோட்டப்பாட்டாளிகளின் அகராதியில், வேதனை, வலி, துயரம் என எதிர்மறையான பொருள் வரும் அளவுக்கு சொல்லெண்ணாத் துயரங்களை தோட்டத் துண்டாடல்களும் மேம்படுகளும் தொழிலாளர்களுக்குத் தந்துள்ளன. வாழ, வசிப்பிடத்திற்காகவும் நடத்திய போராட்டத்திற்கு மத்தியில் தோட்டத் தமிழ்ப்பள்ளியையும் கைவிடவில்லை. ஆதிக்கவர்க்கத்தின் ஆணைக்கு கட்டுப்பட்டு அடிக்கடி இடமாற்றம் செய்யப்பட்ட இப்பள்ளி, இன்று நிலையான இடத்தில் புதுப் பொலிவுடன் காட்சியளிக்கிறது 1900 ஆம் ஆண்டுகளில் மிட்லண்ட்ஸ் தோட்டத்தில் வசித்த தமிழர்கள் தங்கள் பிள்ளைகளும் கல்வி பெற வேண்டும் என விரும்பினர். இந்த பொறுப்பை ஓரளவு கல்வி கற்று மேலாளர்களாக பணி புரிந்த கண்காணிகளிடம் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கும் பொறுப்பை ஒப்படைத்தனர். 2000ஆம் ஆண்டுகளில் பல்வேறு சவால்களையும் இயற்கை பேரிடர்களையும் சந்தித்த இப்பள்ளி தோட்டத்தின் மற்றொரு பகுதிக்கு தற்காலிகமாக இட மாற்றம் கண்டது. கடந்த 2004ஆம் ஆண்டில் செக்சன் 7இல் உள்ள மைதானத்திற்கு அருகே தற்காலிகமாக இட மாற்றம் கண்ட அப்பள்ளி பல்வேறு தரப்பினரின் விடா முயற்சி மற்றும் சிலாங்கூர் மாநில அரசின் ஒத்துழைப்பின் காரணமாக இன்று அதே இடத்தில் நாட்டிலுள்ள அனைத்து பள்ளிகளுக்கும் எடுத்துக்காட்டாக அதிநவீன தோற்றத்துடன் காட்சியளிக்கிறது.



## விளையாட்டில் அனைத்துலக நிலையில் சாதனை

மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் தேசிய நிலையில் மட்டுமின்றி அனைத்துலக அரங்கிலும் சாதனை படைத்துள்ளனர். இப்பள்ளி தோற்றத்தின் வழி மட்டுமல்லாது மாணவர்களின் ஆற்றலின் வாயிலாகவும் பிருமாண்டத்தை காட்டி வருவதை பள்ளியின் சாதனை பட்டியல் சான்று பகர்கின்றது.

மிட்லண்ட்ஸ் பள்ளி மாணவர்களின் இச்சாதனைகளுக்கு ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கம், பள்ளி மேலார் வாரியம் ஆகிய தரப்பினரின் அளப்பரிய பங்களிப்பு முக்கிய காரணமாக விளங்கியதாகவும் அவர் குறிப்பட்டார்.

குறிப்பு : இந்த பள்ளிப் பற்றிய மேற்படி தகவல்கள் sela

## பள்ளிகளின் நிர்மாணிப்பு , சீரமைப்பு மானியங்கள் இந்திய குத்தகையார்களுக்கு என்பதை வரவேற்கிறோம்.

# மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி இந்தியர்களின் ஜீவகாவியம்.



**திரு சுப்பையா**
பள்ளி வாரியத்தின் பொருளாளர்

இன்று 100 ஆண்டுகளை தாண்டி ஒரு பள்ளியோ அல்லது ஆலயமோ, இந்நாட்டில் பெயர் சொல்லிக்கொண்டு இருக்கிறது என்றால், அதற்கென பல சிறப்புகள் இருக்கும், முக்கியமாக அதற்கு பின்னால் பல மாமனிதர்களின் உழைப்பும், தியாகங்களும் இருக்கும், அதுவே ஒரு மாநில தலைநகரில் அல்லது நாட்டின் தலைநகரில் வீற்றிருக்க இன்னும் பல சிறப்பு காரணங்களும் சிறப்பானவர்களின் உழைப்பும் இருக்கும், அப்படிப்பட்ட சாதனைகளுக்கு பின்னால் இருப்பவர்கள் மாமனிதர்கள் என்று புகழ்ப்பாட பட வேண்டியவர்கள் ஆனால் என்ன துரதிஸ்டம் மற்றவர்களின் சாதனையை கண்டு சகிக்க முடியாத ஒரு கூட்டம், சாதனையாளர்களின் மீது, அவதூறுகளை அள்ளி வீசதவறுவதில்லை, தாங்களை வல்லவர்களை என காட்டிக்கொள்ள மல்லாந்து படுத்துக்கொண்டு வானை நோக்கி எச்சில் உமிழும் போக்கு கேவலமானது.

## சாதனைகள்

மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளியின் கட்டுமானத்தின் வெற்றி, பக்காத்தானை தேர்ந்தெடுத்த மக்களின் வெற்றியாகும், நம் தேவை என்ன? அரசிடம் மக்கள் எதிர்ப்பார்த்தது என்ன என்பதனை அரசுக்கு உணர்த்த பக்காத்தானை இந்தியர்கள் பயன் படுத்திக்கொண்டனர் அது இந்தியர்களின் புதிய அணுகு முறைக்கு கிடைத்த வெற்றி. அதனையே எதிர்கால பாணியாக, நமது கொள்கையாக கொள்ள வேண்டும்.

1. முழுக்க – முழுக்க இந்திய குத்தகையாளரால், குறைந்த விலையில், குறுகிய காலத்தில், தரமான வேலைபாடுகளுடன், பல வசதிகளுடன் கட்டப்பட்டது. ஒரு இந்திய குத்தகையாளர் சுய நலமின்றி, பெரிய லாபம் கருதாமல் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே தமிழ்ப்பள்ளியை வெற்றிகரமாகக் கட்டிமுடித்துக் கொடுத்ததன் பயன்,

**“மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி கட்டிய நிறைவு விழாவுக்கு பின், மூன்றே வாரத்தில் இந்தியச் சமுதாயத்திற்கு 10 கோடி வெள்ளிகளை வெகுமதியாக ஈட்டி தந்தது”.**

நாடு முழுவதும் உள்ள தமிழ்ப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கம், தலைமை ஆசிரியர், தமிழ்ப்பள்ளி வாரியங்கள் விழிப்படைந்தன வீரியமுடன் செயல்பட தொடங்கின. பாரிசான் ஆட்சியில் ஆண்டாண்டு காலமாக மகஜர் கொடுத்தே அலுத்தபோன சமுதாயத்திற்கு, என்ன? எது வேண்டும்? என அரசுக்கு கட்டளையிடவும், தோட்ட மக்களுக்கு கற்றுதந்தது மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளியே.

## முதல் வாரத்திலேயே, 10 கோடி வெள்ளி

நமது பள்ளி திறப்பு விழா கண்ட முதல் வாரத்திலேயே, பிரதமர் அறிவித்த 10 கோடி வெள்ளி மானியத்தை எடுத்துக்கொண்டு கெடா மாநில தமிழ்ப்பள்ளி நிர்வாகிகளைச் சந்தித்த மஇகாவின் அன்றைய தேசிய தலைவர் டத்தோ ஸ்ரீ பழனிவேல், இந்திய குத்தகையாளர்களைக் கொண்டு பள்ளி நிர்வாகங்களே பள்ளிகளை மேம்படுத்த அனுமதிக்க வேண்டி, அவரை கேட்டுக்கொண்டன. அம்மாதிரியான கோரிக்கைகள் சிலாங்கூரிலும் வலுப்பெற்றது. தமிழ்ப்பள்ளி நிர்வாகிகளுக்கு இது நன்றாகத் தெரியும்.

**[ அரசியல்வாதிகள் , கல்வி இலாக்கா அதிகரிகளின் நிபந்தனைகளை ஏற்று தலையாட்டிக் கொண்டிருந்த நிலை மாறி, தமிழ்ப்பள்ளி நிர்வாகங்கள் அரசியல்வாதிகளுக்கும் , கல்வி இலாக்காவுக்கும் கட்டளை இடும் கௌரவம் இப்பள்ளியால் நமக்கு கிட்டியது. ]**

## நம்மாலும் முடியும் நம்பிக்கை பிறந்தது.

கோளாறுகளுடன் கட்டிக் கொடுக்கப்பட்ட கட்டிடங்களை, ஏற்றுக்கொண்டு தொடர்ந்து பற்பல பிரச்சனைகளை எதிர்நோக்கிய கலாச்சாரத்துக்கு விடை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம், மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளியின் வெற்றிக்கு பின் தமிழ்ப்பள்ளி நிர்வாகிகளிடம் ஏற்பட மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளியின் வெற்றிகரமான கட்டுமானமே காரணம், மக்கள் துணிவுடைய ஆட்சி மாற்றமே காரணம்.

**{ 50 ஆண்டுகளாக தோட்ட பாட்டாளிகள் உதிரத்தை உறிஞ்சியவர்கள் தமிழ்ப்பள்ளிக்கு நிலத்தை ஒதுக்க மறுத்தவர்கள், அதே நிலத்தை பொன் தட்டில் வைத்து வழங்கியது எப்படி? }**

மிட்லண்ஸ் தோட்டத்தின் பெரும்பகுதி நிலத்தை மேம்பாட்டுக்கு எடுத்துக்கொண்ட பி.கே.என்.எஸ் என்ற சிலாங்கூர் மாநில மேம்பாட்டு கழகம், அதே தோட்டத்திலிருத்த பள்ளிக்கு, தோட்டபாட்டாளிகளின் மறுகுடியேற்றமான செக்சன் 7லில் நிலம் ஒதுக்க மறுத்து விட்டது. அந்த தோட்டத்தின் வேறொரு பகுதியை வாங்கிய ஐ.சீடி நிறுவனம் தமிழ்ப்பள்ளிக்கு எதாவது ஒரு இடத்தில் நிலம் ஒதுக்கித்தர நிர்பந்திக்கப் பட்டது.

**இன்று சிலாங்கூரில் மட்டுமல்ல நாட்டில் பல புதிய பள்ளிகள் தோன்ற மிட்லண்ஸ் தமிழ்ப்பள்ளியின் வெற்றியே மூலக்காரணம். அதன்படி, கிள்ளான் மாவட்டத்தில் சொந்தோசா தமிழ்ப்பள்ளி, பெட்டாலிங் மாவட்டத்தில் மாணிக்கவாசம் தமிழ்ப்பள்ளி, உலு லங்காட் மாவட்டத்தில் பண்டார் மக்கோத்தா தமிழ்ப்பள்ளி, சிப்பாங் மாவட்டத்தில் சுங்கை பீலேக் தமிழ்ப்பள்ளி தோன்ற புள்ளியார் சுழியாக அமைந்தது மிட்லண்ட் தமிழ்ப்பள்ளியின் சாதனையே!**

மிட்லண்ஸ் ஒரு தமிழ்ப்பள்ளியாக மட்டும் இல்லாமல் சமுதாயத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் சர்வ கலாசாலையாகவும் உருவெடுத்துள்ளது நமது நோக்கம் வெற்றியடைந்தது,

**- இது நம் பிள்ளைகளின், நாளைய சமுதாயத்தின் இலட்சியத்துக்கு, பல நல்ல உள்ளங்களின் எதிர்கால திட்டங்களுக்கு, முயற்சிக்கு ஊக்கமளிக்கும ஒரு உன்னத காவியமாக அமைந்தது மிட்லண்ட் தமிழ்ப்பள்ளி.**

**- சிலாங்கூரில் 2008ம் ஆண்டு மக்கள் எடுத்த முடிவு, ஒரு பொறுப்பு மிக்க ஆட்சியை, ஒரு நிர்வாகத்தை மாநிலத்துக்கு வழங்கியது.**

**- மக்களுக்கு இன்று ஒரு மாற்று தேர்வாக பக்காத்தான் அரசுகள் அமைந்துள்ளன.**

**- மிட்லண்ஸ் தமிழ்ப்பள்ளி கட்டுமானத்தில் இந்தியர் அடைந்த வெற்றி, கட்டட கட்டுமானத்தில் மட்டுமன்றி, இத்தேசத்தையே மறுநிர்மாணிப்பு செய்யும் ஆற்றல், செயல் திறன் நமக்குண்டு என்பதை காட்டும் ஒரு மார்க்கமே.**

இந்தியர்கள் இந்நாட்டு அரசியல்வாதிகளுக்கு உணர்த்த முற்பட்டது, ‘‘ஆட்சியை மாற்ற மட்டுமல்ல, நல்ல ஆட்சியை வழங்கவும் நம்மால் முடியும்,’’ நமது கோரிக்கைகளை ஏற்று அங்கீகரிக்கும் எவருடனும் சேர்ந்து வேலை செய்வேம் என்பதனை உணத்தினோம். அதன் பயன்,

**நாடு சுதந்திரத்திற்கு பின் வேகமாக சரிந்துவந்த தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை, இப்பொழுது வளர தொடங்கி விட்டது. அது மிட்லண்சின் வெற்றி மட்டுமல்ல இந்நாட்டு இந்தியர்களின், தமிழ்ப்பள்ளிகளின், தாய்மொழிக்கல்வியின் வெற்றி!**



# அருள் புரிவதுடன் பக்தர்களுக்கு சேவையாற்றும்

## கிள்ளான் பண்டார் பார்க்லண்ட்ஸ் முனியாண்டி ஆலயம்

இந்நாட்டில் மேம்பாட்டுத் திட்டங்கள் காரணமாக தடம் பதித்த மண்ணிலிருந்து இடம் பெயர்ந்த தோட்டப்புற ஆலயங்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருக்கும். அதே போல் அந்த மேம்பாட்டு அரக்கனின் பிடியில் சிக்கி அடையாளம் தெரியாமல் போன ஆலயங்களின் எண்ணிக்கையும் அதை விட அதிகம் இருக்கும்.

மேம்பாட்டாளர்களின் கருணைப் பார்வை காரணமாக சிதைந்து விடாமலும் சிதிலமடையாலும் தப்பிய சில நூறு ஆலயங்களில் ஒன்று தான் கிள்ளான், ஹைலண்ட்ஸ் தோட்ட முனியாண்டி ஆலயம்.

தோட்டங்களில் இருந்த பல பெரிய ஆலயங்கள் காணாமல் போனதற்கு , அங்கு வாழ்ந்த மக்களின் அல்லது ஆலய நிர்வாகங்களின் இயலாமையை சாடாமல் இருக்க முடியாது.

அதே வேளையில், பழைய தோட்ட ஆலயங்கள் புதிய பொலிவுடன், புதிய இடங்களில் காலத்திற்கு ஏற்ப புதிய இயல்புகளுடன் சமுதாயத்திற்கு சேவையாற்றவும், தொடர்ந்து மிளிரவும் சிறந்த நிர்வாகங்களே காரணம் என்பதை மறுக்கவும் கூடாது.

ஹைலண்ட்ஸ் தோட்டம் புக்கிட் திங்கி நகரமாக உருவெடுத்த காரணத்தால் இந்த ஆலயம் பண்டார் பார்க்லண்ட்ஸ் எனுமிடத்தில் அரை ஏக்கர் நிலத்தில் அம்மன் ஆலயம் என்ற பெயரில் எழில்மிகு வகையில் வீற்றிருக்கிறது.

இந்த ஆலயத்தின் வரலாறு கடந்த 1965ஆம் ஆண்டு ஹைலண்ட்ஸ் தோட்டத்தில் உருவானதாக கூறுகிறார் ஆலய முன்னோடிகளில் ஒருவரான திரு. சி.குஞ்சன். இந்த ஹைலண்ட்ஸ் தோட்டம் கிள்ளான் நகரிலிருந்து பந்திங் செல்லும் சாலையின் 3வது மைலில் அமைந்திருந்தது.

தோட்டத்தின் பிரதான ஆலயம் தவிர்த்து, வேலையிடத்தில் விபத்துகளிலிருந்தும் விஷ ஜந்துகளிடமிருந்தும் தோட்டப்பாட்டாளிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் நோக்கில், இந்த முனியாண்டி ஆலயம் உருவாக்கப்பட்டதாக குஞ்சன் தெரிவித்தார்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் மிகச் சிறிய அளவிலும் பொலிவிழந்தும் காணப்பட்ட இந்த ஆலயத்திற்கு புத்துயிரூட்டும் நோக்கில் தோட்டத்தைச் சேர்ந்த சிலம்பன் மற்றும் ராமசாமி கங்காணி ஆகியோர் அதனை விரிவாக்கம் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

விரிவாக்கம் செய்யப்பட்ட ஆலயத்தில் பக்தர்களின் வழிபாடும் வெகு விமரிசையாக வருடாந்திர திருவிழாக்களும் நடைபெற்று வந்தன.

இந்நிலையில் 90ஆம் ஆண்டுகளில் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இந்த ஹைலண்ட்ஸ் தோட்டம் டபள்யு.சி.டி நிறுவனத்தின் கைக்கு மாறியது. வழக்கம் போல் ஆலயத்திற்கும் ஆபத்து வந்தது.

எனினும், மேம்பாட்டு நிறுவனத்துடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் பலனாக இங்கிருந்து சில கிலோமீட்டர் தொலைவிலுள்ள பண்டார் பார்க்லண்ட் வீடமைப்பில் அரை ஏக்கர் பரப்பளவில் மாற்றும் நிலம் தரப்பட்டது.

அதோடு மட்டுமின்றி மேம்பாட்டு நிறுவனமே புதிய ஆலயத்திற்கு அடித்தளம் மற்றும் கட்டுமானத்தை உருவாக்கும் பணிகளை செய்து தந்தது. கோபுரம் அமைப்பது மற்றும் ஸ்தபதி வேலைகளை நாங்கள் மேற்கொண்டோம். இவ்வாலயம் முழுமையாக பூர்த்தியாகி கடந்த 1998ஆம் ஆண்டில் முதல் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது என்று குஞ்சன் ஆலய வரலாற்றை விவரித்தார்.

புதிய இடத்தில் அரசாங்கத்தில் பதிவு பெற்று பொலிவுடன் வீற்றிருக்கும் இந்த ஆலயத்தை சமய தளமாகவும் சமூக மையாகவும் திறம்பட வழி நடத்தி வருகின்றனர் கே.ரமேஷ் தலைமையிலான நிர்வாக குழுவினர்.

இந்த ஆலயத்தில் வீற்றிருக்கும் அம்மன், முனியாண்டி, மதுரைவீரன், நாகம்மாள், முருகன், விநாயகருக்கு தினசரி சிறப்பு வழிபாடுகள் நடைபெறும் வேளையில் ஒவ்வோராண்டும் வைகாசி மாதம் திருவிழா வெகு விமரிசையாக நடத்தப்படுகிறது என்றார் அவர்.

இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கு மாநில அரசு பக்கத் துணையாக இருந்து வந்துள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டு மாநில பக்கத்தான் அரசாங்கம் இந்த ஆலயத்திற்கு 50,000 வெள்ளியை மானியமாக வழங்கியது.

அந்த தொகையில் 20,000 வெள்ளியை அருகிலுள்ள இரு சிறிய ஆலயங்களின் வளர்ச்சிக்காகவும் வழங்கப்பட்டது. மீதி பணம் இதர சமூகப் பணிகளுக்காகவும் பயன்படுத்தினோம். எஞ்சிய தொகையைக் கொண்டு ஆலயத்தில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டோம் என்றார் அவர்.

இந்த ஆலயத்தில் பரத நாட்டிய வகுப்புகள் உள்பட பல்வேறு சமூக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் கோவிட்-19 நோய்த் தொற்று பரவல் காரணமாக அந்த நடவடிக்கைகள் யாவும் தற்போது தடை பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், ஆலய நிர்வாகத்தின் சமூக சிந்தையால், தூர நோக்கு பார்வையால் எங்கு எல்லாம் துன்ப குரல் ஒலிக்குதோ அங்கு சென்று அல்லல் படும் மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகிறது.

கடந்த 2019 ஆண்டு கிள்ளான் ஸ்ரீ அண்டாலாசில் உள்ள லெஜண்டா சிறப்பு குழந்தைகள் இல்லா பிள்ளைகளுக்கு தீபாவளி பண்டிகைக்கு உணவு, புதிய ஆடைகள், இனிப்புகள் மற்றும் நிதி வழங்கியது போன்ற சமூக பணிகளை மற்ற இயக்கங்களுடன் இணைந்து மேற்கொண்டது..

கடந்த 2019ம் ஆண்டில் தஞ்சோங் காராங் பகுதியில் தாமான் ஸ்ரீ தஞ்சோங் காரங்கில் ஏற்பட்ட தீவிபத்தில் வீட்டையும் உடமைகளையும் இழந்த மலாய்க்கார குடும்பம் இஸ்லாமிய சக்காட் வாரியத்தின் மூலம் வீட்டை சீரமைக்க உதவி பெற்ற வேளையில், மூன்று பிள்ளைகள் மற்றும் மனைவியுடன் அங்கு வாழ்ந்த ஸ்ரீராம் என்ற இந்திய குடும்பத்துக்கு உதவ எவருமில்லை என்ற நிலையை அறிந்து அந்த குடும்பம் வீட்டு உடமைகளை வாங்க நிதி உதவி வழங்கியது.

கோலாசிலாங்கூர் ஜெரம் வட்டாரத்தில் புக்கிட் பாஞ்சாங் என்ற இடத்தில் கவனிப்பாரின்றி கைவிடப்பட்ட வீட்டில் மூதாட்டி ஒருவருக்கு உணவில்லை என்ற செய்தியை அறிந்து, அவர்களுக்கும், அதே இடத்தில் உடல் ஊனமுற்று தாயாரின் கவனிப்பில் இருப்பவருக்கும் பொருள் மற்றும் நிதி உதவி வழங்கியது.

கடந்த 2020ல் நாட்டில் அமல்படுத்தப்பட்ட பொது முடக்க காலத்தில் ஜாலான் கிள்ளான் பந்திங், ஜிஞ்சாரம் மற்றும் டாமன்சார கம்பொங் காயூ ஆரா ஆகிய இடங்களில் வேலை இழந்து உணவுக்கு சிரம பட்ட நூறு இந்திய குடும்பங்களுக்கு மற்ற பொது இயக்கங்களுடன் சேர்ந்து உணவு பொருட்கள் வழங்கியது போன்ற பொது தொண்டுகளுக்கு கை கொடுக்கும் முன்னணி கோவிலாக விளங்கி வருகிறது பத்து அன்னாம் பண்டார் பார்க்லண்ட்ஸ் முனியாண்டி ஆலயம்.

# 2020இல் வேலையில்லா பட்டதாரிகளின் எண்ணிக்கை 22.5 விழுக்காடு உயர்வு



புத்ரா ஜெயா — கடந்த 2020 ஆம் ஆண்டில் நாட்டில் வேலையில்லா பட்டதாரிகளின் எண்ணிக்கை 22.5 விழுக்காடு உயர்ந்து 202,400 பேராக உயர்ந்தது. கடந்த 2019ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 165,200 பேராக இருந்ததாக தேசிய புள்ளிவிபரத் துறை கூறியது.

பொருளாதாரத்தில் ஏற்பட்ட சாதகமற்ற சூழல் மற்றும் அதன் விளைவாக ஒட்டுமொத்த ஆள்பலச் சந்தைக்கு ஏற்பட்ட பாதிப்பு ஆகிய காரணங்களால் இந்நிலை உருவானதாக தேசிய புள்ளிவிபரத் துறையின் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் முகமது உஸிர் மஹிடின் கூறினார். அதோடு கடந்த 2019ஆம் ஆண்டில் 3.9 விழுக்காடாக இருந்த வேலையில்லாத பட்டதாரிகளின் விகிதாசார அளவு கடந்தாண்டு 0.5 விழுக்காடு அதிகரித்து 4.4 விழுக்காடாக ஆனதாக அவர் தெரிவித்தார். வேலையில்லா பட்டதாரிகளில் சுமார் 75 விழுக்காட்டினர் தீவிரமாக வேலை தேடி வருகின்றனர். அவர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் குறைந்தது மூன்று மாதங்களாக வேலையின்றி இருந்து வருகின்றனர் என்றார் அவர். பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், போலிடெக்னிக் கல்விக்கூடங்கள் மற்றும் அதற்கு இணையான அங்கீகரிக்கப்பட்ட கல்விக் கூடங்களில் குறைந்தது ஈராண்டு பயின்று சான்றிதழ் வைத்திருப்பவர்கள் பட்டதாரிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள 43 லட்சத்து 50 ஆயிரம் பட்டதாரி பணியாளர்களில் 68.8 விழுக்காட்டினர் தேர்ச்சி பெற்ற தொழில்துறையினர் பிரிவில் இடம் பெற்றிருந்தாக டத்தோஸ்ரீ உஸீர் தெரிவித்தார்.



## தேக்கம் கண்ட விவசாயப் பொருள் விற்பனை பிரச்னைக்கு விவசாய பரிவுத் திட்டத்தின் வழி தீர்வு

அம்பாங் – நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக விவசாய பொருள்களின் விற்பனையில் ஏற்பட்ட தேக்க நிலைக்கு சிலாங்கூர் பரிவு விவசாய திட்டத்தின் வாயிலாக தீர்வு காணப்பட்டுள்ளது.

இப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக சுமார் 400,000 வெள்ளி மதிப்புள்ள விவசாய பொருள்களை சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டுக் கழகம் விவசாயிகளிடமிருந்து வாங்கியதோடு அவர்கள் தங்கள் விவசாயப் பொருள்களை விற்பனை செய்வதிலும் உதவி புரிந்ததாக விவசாயத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹாஷிம் கூறினார். இந்த நடவடிக்கைகளின் வாயிலாக சந்தையில் விவசாயப் பொருள்கள் மிதமிஞ்சிக் காணப்படும் பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டது. தொடக்கத்தில் தேக்கம் கண்டிருந்த விவசாயப் பொருள்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. எனினும் சிலாங்கூர் விவசாய பரிவுத் திட்டத்தின் வாயிலாக அந்த எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டது என்றார் அவர். கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல்படுத்தப்பட்டுள்ள அம்பாங், மெர்பாத்தி அடுக்குமாடி குடியிருப்பைச் சேர்ந்தவர்களுக்கு அடிப்படை உணவுப் பொருள்களை விநியோகித்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஷா ஆலம் கான்கார்ட் ஹோட்டல் அருகே லோரி மூலம் விவசாய பொருள்களை விற்பனை செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு மாநிலம் முழுவதும் 12 நிரந்தர விற்பனை மையங்களும் திறக்கப்பட்டதாக அவர் சொன்னார்.

இந்த மையங்களில் விற்பனை செய்யப்படும் விவசாய பொருள்கள் மற்ற இடங்களைக் காட்டிலும் 50 விழுக்காடு குறைவான விலையைக் கொண்டிருக்கும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த மாதம் 2ஆம் தேதி கூறியிருந்தார்.

## முதியோர், கடும் நோயாளிகள் வீடுகளுக்கு நேரில் சென்று தடுப்பூசி- குணராஜ் திட்டம்



கிள்ளான் — தடுப்பூசி செலுத்தும் மையங்களுக்கு செல்ல இயலாத நிலையில் உள்ளவர்களின் வீடுகளுக்கு மருத்துவர்கள் நேரில் சென்று தடுப்பூசி செலுத்துவதற்கான திட்டத்தை செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் முன்னெடுத்துள்ளார்.

கிள்ளான், செஞ்சிலுவை சங்கத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தில் மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் படுக்கையில் இருக்கும் கடும் நோயாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அவர் சொன்னார்.

இத்திட்ட அமலாக்கம் குறித்து தற்போது விவாதிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் என்று விரைவில் அறிவிக்கப்படும். இம்மாதம் 10 அல்லது 11ஆம் தேதிகளில் இதனை நடைமுறைப்படுத்தும் சாத்தியம் உள்ளது என அவர் குறிப்பிட்டார்.

பணியாளர்கள் ஒவ்வொரு இடமாகச் சென்று தேவைப்படுவோருக்கு தடுப்பூசி செலுத்தும் பணியை மேற்கொள்வர். பிக் எனப்படும் தேசிய கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தின் கீழ் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது என்றார் அவர். இங்குள்ள செக்சன் 19, டி பல்மா ஹோட்டலில் உள்ள செல்வேக்ஸ் தடுப்பூசி மையத்தில் தடுப்பூசி செலுத்தும் பணிகளைப் பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

வருகைக்கான முன்பதிவு இன்றி நேரடியாக தடுப்பூசி பெறுவதற்கான வாய்ப்பு செந்தோசா தொகுதியைச் சேர்ந்த 300 பேருக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## எஸ்.ஓ.பி. விதிமீறல் ஆறு வணிக மையங்களுக்கு எம்.பி.எஸ்.ஜே. அபராதம்



சுபாங் ஜெயா – ஸ்ரீ கெம்பாங்கான் தொழில்பேட்டைப் பகுதியிலுள்ள ஆறு வணிக மையங்களுக்கு சுபாங் ஜெயா மாநகர் மன்ற அமலாக்கப் பிரிவினர் கடந்த 22 ஆம் தேதி குற்றப்பதிவுகளை வழங்கினர்.

தேசிய மீட்சித் திட்டத்தின் முதல் கட்டத்திற்கான எஸ்.ஓ.பி. விதிமுறைகளை பின்பற்றி நடத்தத் தவறியதற்காக அந்த வணிக மையங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டதாக மாநகர் மன்றத்தின் வர்த்தக, வியூக நிர்வாகத் துறை துணை இயக்குநர் அஸ்ஃபரிசால் அப்துல் ரஷிட் கூறினார். அப்பகுதியிலுள்ள 20 வணிக மையங்கள் மற்றும் தொழிற்சாலைகள் மீது சோதனை மேற்கொள்ளப்பட்டது. வர்த்தக உரிமத்தை புதுப்பிக்காதது உள்பட பல்வேறு எஸ்.ஓ.பி. விதிமீறல் குற்றங்களை அதன் உரிமையாளர்கள் புரிந்தது இச்சோதனையில் கண்டறியப்பட்டது என்றார் அவர்.

கோவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக எஸ்.ஓ.பி. விதிமுறைகளையும் மாநகர் மன்றத்தின் சட்டதிட்டங்களையும் அனைத்து வர்த்தக ஸ்தாபனங்களும் முறையாக கடைபிடிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# புக்கிட் மெலாவத்தி தொகுதியில் 1,400 பேருக்கு உணவுப் பொருள் விநியோகம்

ஷா ஆலம் – புக்கிட் மெலாவத்தி சட்டமன்றத் தொகுதியில் உள்ள சுமார் 1,400 பேருக்கு உணவுப் பொருள் உதவி வழங்கப்படவுள்ளது. நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக பொருளாதார ரீதியில் நலிவடைந்திருக்கும் குடும்பங்களுக்கு உதவும் நோக்கில் இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

கோவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறுவோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு கட்டங் கட்டமாக இந்த உதவி வழங்கப்படும் என்று புக்கிட் மெலாவத்தி சட்டமன்ற உறுப்பினர் ஜுவாய்ரியா ஜுல்கிப்ளி கூறினார்.

அரிசி, சமையல் எண்ணெய், கிச்சாப், காப்பி, சார்டின், கோழி மற்றும் முகக் கவசம் உள்ளிட்ட பொருள்கள் அந்த உதவிப் பொருள் திட்டத்தில் இடம்பெற்றுள்ளது என்று அவர் சொன்னார்.

இதுவரை 750 பேருக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்ட வேளையில் எஞ்சியோருக்கு கட்டங் கட்டமாக அப்பொருள்கள் விநியோகம் செய்யப்படும்.

இந்த உதவிப் பொருள்கள் வசதி குறைந்தவர்களின் சுமையை ஓரளவு குறைக்க உதவும் என நம்புகிறோம் என்றார் அவர்.

மக்கள் பரிவுத் திட்டத்தின் கீழ் இத்தகை உணவு பொருள் உதவித் திட்டத்தை மேற்கொள்வதற்கு ஏதுவாக மாநிலத்திலுள்ள 56 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தலா ஒரு லட்சம் வெள்ளியும் 22 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் தலா ஐம்பதாயிரம் வெள்ளியும் வழங்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த மாதம் 20ஆம் தேதி அறிவித்திருந்தார்.

# செல்வேக்ஸ் திட்டத்தின் கீழ் தடுப்பூசி வாங்க 6,200 நிறுவனங்கள் ஆர்வம்




ஷா ஆலம் – செல்வேக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் எனப்படும் சிலாங்கூர் மாநில அரசின் தொழில் துறைக்கான தடுப்பூசித் திட்டத்தின் வழி தடுப்பூசி கொள்முதல் செய்ய 6,200 நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன.

உற்பத்தி மற்றும் சேவைத் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் அதிகளவில் கீழ் தடுப்பூசி வாங்க பதிவு செய்துள்ளதாக வாணிகம் மற்றும் தொழில்துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார்.

செல்வேக்ஸ் திட்டத்தின் கீழ் இதுவரை 134,837 டோஸ் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 102,089 தடுப்பூசிகள் தொழில் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும் 32,748 தடுப்பூசிகள் பொதுமக்களுக்கும் செலுத்தப்பட்டுள்ளன என்று அவர் சொன்னார்.

தேசிய கோவிட்-19 தடுப்பூசித் திட்டம் மற்றும் செல்வேக்ஸ் திட்டத்தின் வாயிலாக பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்பதை மாநில அரசு இலக்காக கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாநில அரசு, தொழில் துறைக்கு இருபது லட்சம் தடுப்பூசிகளை ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் பத்து லட்சம் தொழிலாளர்களுக்கு தடுப்பூசி செலுத்த முடியும். முதலாளிகள் இந்த தடுப்பூசிகளை வாங்கி தொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்க இத்திட்டம் வகை செய்கிறது.

மாநில அரசு மற்றும் முதலாளிகள் இணக்கம் கண்டபடி செல்வேக்ஸ் இண்டஸ்டீஸ் திட்டத்தின் கீழ் ஒரு தொழிலாளிக்கு இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்த உண்டாகும் மொத்த செலவு 350 வெள்ளியாகும்.

# புக்கிட் லஞ்சான் தொகுதி ஏற்பாட்டில் வசதி குறைந்தவர்களுக்கு உணவு பொருள் விநியோகம்



பெட்டாலிங் ஜெயா – நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல்படுத்தப்பட்டுள்ள காலத்தில் அந்நிய நாட்டினர் உள்பட வசதி குறைந்தவர்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகிப்பதில் தீவிரம் காட்டி வருகிறது புக்கிட் லஞ்சான் தொகுதி. கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக வருமானம் பாதிக்கப்பட்டத் தரப்பினர் குறுஞ் செய்தி உள்ளிட்ட சமூக ஊடகங்கள் வாயிலாக தங்களைத் தொடர்பு கொண்டு உதவி கோரி வருவதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எலிசபெத் வோங் கூறினார். கடந்த இரு மாதங்களாக வேலையில்லாத காரணத்தால் வருமானம் இன்றி தவிக்கும் அந்நிய நாட்டினரையும் நாங்கள் கைவிட விரும்பவில்லை.

அவர்களுக்கும் 70 வெள்ளி முதல் 80 வெள்ளி வரையிலான உணவுப் பொருள்கள் நாங்கள் வழங்கினோம் என்றார் அவர்.

சமையல் பொருள்கள் தவிர்த்து, சில உணவகங்கள் தயார் செய்த சமைத்த உணவுகளையும் வழங்கி வருகிறோம். எங்களின் இந்த திட்டத்தின் வாயிலாக சுமார் ஆயிரம் பேர் பயனடைந்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இங்குள்ள டிரோப்பிகானா கார்டன்ஸ் மால் கட்டிடத்தில் நடைபெறும் சிலாங்கூர் அரசின் செல்வேக்ஸ் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

# சிலாங்கூர் சுகாதார இலாகாவுக்கு 7,000 சுய மதிப்பீட்டு கருவிகள்- மாநில அரசு வழங்கியது

ஷா ஆலம் – சிலாங்கூர் மாநில சுகாதார இலாகாவுக்கு 7,000 கோவிட்- 19 சுய மதிப்பீட்டு கருவிகள் அடங்கிய பெட்டிகளை மாநில அரசு வழங்கியுள்ளது.

வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கோவிட்-19 நோயாளிகள் தங்கள் உடல் நிலை குறித்து அறிந்து கொள்ள உதவும் உபகரணங்கள் அடங்கிய இந்த பெட்டிகளை மாநில சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் சிலாங்கூர் சுகாதாரத் துறை இயக்குநர் டத்தோ டாக்டர் ஷஹாரி ஙகாடிமானிடம் ஒப்படைத்தார்.

கே.என்.95 ரக முகக் கவசங்கள், இரத்தத்தில் பிராணவாயு அளவை சோதிக்கும் பல்ஸ் ஆக்சிமீட்டர் சாதனம் உள்ளிட்ட கருவிகள் அந்த பெட்டியில் உள்ளதாக டாக்டர் சித்தி மரியா அறிக்கை ஒன்றில் கூறினார். சுகாதார அதிகாரிகள் நோயாளிகளின் உடல் நிலை குறித்து அறிந்து கொள்வதற்கு ஏதுவாக தனிமைப்படுத்தப்பட்டவர்கள் ஆக்சிமீட்டர் காட்டும் நாடித் துடிப்பு அளவையும் உடலில் ஏற்பட்டுள்ள இதர அறிகுறிகளையும் செலங்கா செயலியில் பதிவிட வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

நாடித் துடிப்பையும் இரத்தத்தில் உள்ள பிராணவாயு அளவையும் கணக்கிடுவதற்கு இந்த பல்ஸ் ஆக்சிமீட்டர் உதவுகிறது. உடலில் வழக்கமான ஆக்சிஜன் அளவு 95 முதல் 99 விழுக்காடாக இருக்க வேண்டும். அதே சமயம் நாடித் துடிப்பு நிமிடத்திற்கு 50 முதல் 90 வரை இருக்க வேண்டும்.



# நிரந்தர பணி நியமனம் கோரிய ஒப்பந்த மருத்துவர்கள் போராட்டற்கான தீர்வு கானல் நீரா?

கோலாலம்பூர் – அரசாங்க மருத்துவமனைகளில் பணிபுரியும் 23000 க்கு மேற்பட்ட ஒப்பந்த மருத்துவர்கள் விவகாரம், நாட்டு மக்களும் அரசாங்கமும் அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டிய விவகாரம். தங்கள் உயிரை பணையம் வைத்து சேவையாற்றும் மருத்துவர்களை நீண்ட நாட்களாக அரசாங்கம் அலட்சியம் செய்துவந்துள்ளதையே இந்த மறியல் காட்டுகின்றது. அரசாங்கம் ஒப்பந்த மருத்துவர்களின் விவகாரத்தை அவர்களின் வாழ்வாதரங்களை தொட்ட ஒரு விவகாரமாக மட்டுமில்லாமல், நாட்டிற்கு ஏற்படுத்தியுள்ள அறிவுசார் சொத்து இழப்பையும், ஒவ்வொரு மலேசியரின் உயிர் மற்றும் உன்னத வாழ்வுக்கு சிறப்பாக சேவையாற்றும் மருத்துவ சேவைக்கு நாடு அளிக்கும் அங்கிகாரத்துக்கான அளவு கோளாக பார்க்க வேண்டும். இம்மாதம் 26ஆம் தேதி நாடு தழுவிய அளவில் மறியலில் ஈடுபட்டனர். இந்த மறியலில் இருபதுக்கும் மேற்பட்ட அரசாங்க மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் பங்கேற்றனர். ஒப்பந்த மருத்துவர்களுக்கு நிரந்த பணி நியமனம், நிரந்தர மருத்துவர்களுக்கு இணையான சம்பளம், சலுகைகள் மற்றும் விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து மருத்துவர்கள் இந்த மறியல் போராட்டத்தை நடத்தினர்.



கோலாலம்பூர் மருத்துவமனை, கிள்ளான், துங்கு அம்புவான் ரஹிமா மருத்துவமனை, ஷா ஆலம் மருத்துவமனை, மலாக்கா மருத்துவமனை, கோத்தா பாரு, ராஜா பெரெம்புவான் ஜைனாப் மருத்துவமனை உள்பட நாட்டிலுள்ள பல்வேறு மருத்துவமனைகளைச் சேர்ந்த மருத்துவர்கள் இந்த பேராட்டத்தில் பங்கு கொண்டனர். இவர்களில் பலர் கருப்பு உடைகளை அணிந்திருந்ததோடு பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். இந்த மறியலின் போது எஸ்.ஒ.பி. எனப்படும் நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைகள் மீறப்படாமலிருப்பதை உறுதி செய்ய போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் எதிர்நோக்கி வரும் இப்பிரச்னைக்கு ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தீர்வு காணப்படாமலிருப்பதை கருத்தில் கொண்டு மறியல் போராட்டத்தில் தாங்கள் ஈடுபடவிருப்பதாக ஒப்பந்த மருத்துவர்கள் முன்னதாக அறிவித்திருந்தனர்.

# மறியலில் ஈடுபட்ட ஒப்பந்த மருத்துவர்களுக்கு எதிராக விசாரணை கிடையாது



கோலாலம்பூர் – சிலாங்கூர் மற்றும் கோலாலம்பூரில் ஒப்பந்த மருத்துவர்கள் கடந்த திங்கள் கிழமை நடத்திய அமைதி மறியல் தொடர்பில் அரச மலேசிய போலீஸ் படை விசாரணை அறிக்கையை திறக்காது. கோலாலம்பூர் மருத்துவமனை உள்பட மாநிலத்தின் பல்வேறு மருத்துவமனைகளில் நடைபெற்ற இந்த மறியலில் பங்கேற்ற சுகாதாரப் பணியாளர்களுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்படாது என்று கோலாலம்பூர் போலீஸ் படைத் தலைவர் டத்தோ அஸ்மி அபு காசிம் கூறினார். அந்த மறியல் விவகாரம் தொடர்பில் இதுவரை எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை என்று அவர் செய்தியாளர்களிடம் சுருக்கமாகத் தெரிவித்தார். இதனிடையே, அந்த மறியல் சம்பவங்கள் தொடர்பில் சிலாங்கூர் மாநில போலீசார் விசாரணை மேற்கொள்ளவில்லை என்று மாநில போலீஸ் தலைவர் டத்தோ அர்ஜூனைடி முகமது கூறினார். எனினும், செர்டாங் மலேசிய விவசாய கண்காட்சி மையத்திலுள்ள பி.கே.ஆர்.சி. தனிமைப்படுத்தும் மையத்தில் நடைபெற்ற மறியலின் போது பத்திரிகையாளர்கள் அத்துமீறி நுழைந்தது தொடர்பில் கிடைத்த புகாரின் அடிப்படையில் சுகாதாரப் பணியாளர்கள் விசாரிக்கப்பட்டதாக அவர் சொன்னார். சம்பந்தப்பட்ட தரப்பினரின் அனுமதியின்றி அந்த மேப்ஸ் மையத்தில் நுழைந்தது தொடர்பான கோணத்தில் இந்த விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்றார் அவர். ஒப்பந்த மருத்துவர்களின் பணியை நிரந்தரமாக்க வேண்டும், இதர மருத்துவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பனப் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் உள்ள ஒப்பந்த மருத்துவர்கள் கடந்த திங்களன்று மறியலில் ஈடுபட்டனர்.

# மலேசியாவின் 2021 நிதி பற்றாக்குறை உள்நாட்டு உற்பத்தியில் 6.5 முதல் 7 விழுக்காடாக இருக்கும்



கோலாலம்பூர் – மலேசியாவின் நிதிப் பற்றாக்குறை இந்த ஆண்டு அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.5 முதல் ஏழு விழுக்காடு வரை உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. நிதியமைச்சர் டத்தோ ஸ்ரீ துங்கு ஜஃப்ருல் அப்துல் அஜீஸ் கூறுகையில், மக்களின், நாட்டின் பொருளாதார தேவைகள் அதிகரிக்கும் போதெல்லாம் அதனை பூர்த்திச் செய்ய அரசாங்கம் தயாராக உள்ளது. "எங்களுக்கு ஒரு பற்றாக்குறை உள்ளது, அது ஏழு சதவீதத்தை எட்டும். பற்றாக்குறையின் அளவு கடன் வாங்கும் மற்றும் திரும்ப செலுத்தும் திறன் மற்றும் இருப்புக்களின் அளவை பொறுத்தது. "மலேசியா பொருளாதாரம் A- மதிப்பிடப் பட்டதாக இருந்தாலும், எங்கள் நிதி இருப்புக்களைப் பொறுத்தவரை, நாங்கள் பல A- மதிப்பிடப்பட்ட நாடுகளை விட சிறியவர்கள். ஒரே வித்தியாசம் என்னவென்றால், எங்களுக்கு வலுவான வளர்ச்சி வாய்ப்புகள் உள்ளன, "என்று அவர் தென் சீனா மார்னிங் போஸ்டுக்கு (எஸ்.சி.எம்.பி) அளித்த பிரத்யேக பேட்டியின் போது கூறினார். நாடு மக்களுக்கு போதுமான ஆதரவை அளிக்கிறதா என்பது மிக முக்கியமான விஷயம் என்று அவர் கருத்து தெரிவித்தார்."அரசாங்கம் அளித்துள்ள ஆதரவு – நம்மிடம் உள்ள நிதிக் கட்டுப்பாடுகளைப் பொறுத்தவரை – போதுமானது என்று நான் நினைக்கிறேன். "எங்கள் கடன் சேவை பாதுகாப்பு விகிதத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டும், மேலும் இன்று உள்நாட்டு நிறுவனங்களின் பணப்புழக்கத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டும்," என்று அவர் வலியுறுத்தினார். மக்களால் தொடங்கப் பட்ட வெள்ளைக் கொடி பிரச்சாரம், அரசாங்கத்தின் பொருளாதார தூண்டுதல் தொகுப்புகள் சரியாக செயல்படவில்லை என அர்த்தமா என்ற கேள்விக்கு, துங்கு ஜஃப்ருல், அதனை அப்படியென தான் கருதவில்லை என்று கூறினார். "தேர்ந்தெடுக்கப் பட்ட அனைத்து பிரதிநிதிகளுக்கும் (MP) தங்கள் தொகுதிகளை கவனிக்க ஒதுக்கீடு வழங்கப் படுவதை உறுதி செய்வதன் மூலம் அந்த பிரச்சினைகளில் சிலவற்றை நாங்கள் நிவர்த்தி செய்துள்ளோம். "உண்மையில், அரசாங்கம் ஒரு உணவுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளதுடன், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் எதிர்க்கட்சிகள் உட்பட சமூகத்தின் அனைத்து பிரிவுகளுடனும் இது செயல்படுத்தப் படுகிறது. மக்களுக்கு விரிவான உதவிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட தேசிய மக்களின் நல்வாழ்வு மற்றும் பொருளாதார மீட்புப் பொதியின் கீழ் RM10 பில்லியனை நேரடி நிதியாக அரசாங்கம் செலுத்தியுள்ளது என்று அமைச்சர் கூறினார்.

# 97 விழுக்காட்டு கோல சிலாங்கூர் மக்கள் தடுப்பூசி பெற்றனர்



கோல சிலாங்கூர் – சுமார் 97 விழுக்காட்டு கோல சிலாங்கூர் மக்கள் குறைந்தது ஒரு டோஸ் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

பிக் எனப்படும் தேசிய கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தின் ஒருங்கிணைப்பு அமைச்சு வெளியிட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த விபரம் தெரிய வந்ததாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

அந்த தரவுகளின் அடிப்படையில் கோல சிலாங்கூரில் 223,000 பேர் தடுப்பூசிக்கு பதிவு செய்துள்ளனர். அவர்களில் 180,000 பேர் தடுப்பூசியைப் பெற்று விட்டனர். தடுப்பூசியைப் பெறுவதில் அப்பகுதி மக்கள் கொண்டுள்ள கடப்பாட்டை இது காட்டுகிறது. எஞ்சியுள்ளவர்கள் தடுப்பூசி பெறுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அவர் சொன்னார்.

இங்குள்ள டேவான் பண்டார் பாருவில் நடைபெறும் புக்கிட் மெலாவத்தி தொகுதி நிலையிலான செல்வேக்ஸ் தடுப்பூசித் திட்டத்தின் பணிகளை பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்பதிவு இன்றி பொது மக்கள் நேரடியாக வந்து தடுப்பூசி பெறுவதற்கு வகை செய்யும் இத்திட்டம் இத்தொகுதியில் நடைபெற்றது.

சிலாங்கூர் மாநில அரசின் செல்வேக்ஸ் கம்யூனிட்டி திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த தடுப்பூசி இயக்கம் மேற்கொள்ளப்படுகிறது.

# செலாயாங் நகராண்மைக் கழகத் தலைவராக முகமது யாஸிட் நியமனம்




ஷா ஆலம் – செலாயாங் நகராண்மைக் கழகத்தின் (எம்.பி.எஸ்.) புதிய தலைவராக முகமது யாஸிட் சைரி நியமிக்கப்பட்டுள்ளார். அவரது நியமனம் ஜூலை 19 ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற பதவியேற்புச் சடங்கில் உரையாற்றிய அவர், சட்டவிரோத தொழிற்சாலைகள், சட்டவிரோதமாக குப்பை கொட்டும் சம்பவங்கள், எஸ்.ஒ.பி. விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுவதை உறுதி செய்வது போன்ற விவகாரங்களுக்கு தாம் முக்கியத்துவம் அளிக்கவுள்ளதாகச் சொன்னார்.

பொது மக்களுக்கு தம்மால் இயன்ற அளவு சிறப்பான சேவையை வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களுக்கும் நகராண்மைக் கழகத்திற்கும் இடையே உறவுப் பாலமாக விளங்கும் நகராண்மைக் கழக உறுப்பினர்களின் ஒத்துழைப்பை நான் பெரிதும் எதிர்பார்க்கிறேன். எம்.பி.எஸ். உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு நகராண்மைக் கழக உறுப்பினர்கள் வழங்கும் தகவல்கள் மற்றும் புகார்கள் பெரிதும் துணை புரியும் என்றார் அவர்.

செலாயாங் நகராண்மைக் கழகத் தலைவரான சம்சல் ஷாரில் பட்லிசா முகமது நோர் எரிசக்தி மற்றும் நீர் வள அமைச்சுக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து முகமது யாஸிட் அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டார்.

47 வயதான முகமது யாஸிட், அப்துல் ரசாக் பல்கலைக்கழகத்தில் மனித வள நிர்வாக வியூக நிர்வாகத் துறையில் இளங்கலை பட்டம் பெற்றுள்ளார். பொதுச் சேவைத் துறையில் இவர் 21 ஆண்டுகால அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

# வறட்சி நிலை செப்டம்பர் வரை நீடிக்கும்

## திறந்தவெளி தீயிடல் நடவடிக்கைகளைத் தவிர்க்க ஆலோசனை



ஷா ஆலம் – நாட்டில் தற்போது நிலவி வரும் கடும் வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு திறந்த வெளிகளில் தீயிடல் நடவடிக்கைகளை மேற்கொள்வதை தவிர்க்கும் படி பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தீச்சம்பவங்களை காணும் பட்சத்தில் அது குறித்து உடனடியாக தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைக்கு தகவல் தருமாறு சிலாங்கூர் மாநில தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையின் நடவடிக்கை பிரிவு உதவி இயக்குநர் ஹபிஷாம் முகமது நோர் பொதுமக்களை கேட்டுக் கொண்டார்.

தீச்சம்பவங்கள் சிறிதாக இருந்தாலும் அவை பெரிதாகி பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதை தவிர்ப்பதற்கு ஏதுவாக உடனடியாக தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவிப்பது அவசியம் என்று அவர் கூறினார்.

தென் மேற்கு பருவக் காற்றின் காரணமாக நாட்டில் கடுமையான உஷ்ண நிலை நிலவி வருவதோடு இந்நிலை வரும் செப்டம்பர் மாதம் மத்திய பகுதி வரை நீடிக்கும் என மலேசிய வானிலை ஆய்வுத் துறை கூறியுள்ளது.

இத்தகைய வறட்சி காலங்களில் அடிக்கடி தீச்சம்பவங்கள் ஏற்படும் சாத்தியம் உள்ள தென் உலு லங்காட் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி, வட உலு லங்காட் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி மற்றும் கிள்ளான், ஜொஹான் செத்தியா ஆகிய பகுதிகளில் தமது தரப்பு தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருவதாக ஹபிஷாம் தெரிவித்தார்.

விவசாய பகுதியாக விளங்கும் ஜொஹான் செத்தியா பகுதியில் கடந்த புதன் கிழமை தொடங்கி தீயை அணைக்கும் பணியில் தாங்கள் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக கூறிய அவர், ஒவ்வோராண்டும் வறட்சி காலத்தின் போது இப்பகுதியில் தீயை அணைப்பது வழக்கமான பணியாகி விட்டது என்றார்.

# மேரடோட்டரியம் சலுகையை ஆறு வாரங்களுக்கு நீட்டிக்க
# ஹிஜ்ரா சிலாங்கூர் பரிசீலனை



ஷா ஆலம் – மோராட்டோரியம் எனப்படும் கடனைத் திரும்பச் செலுத்துவதை தொழில்முனைவோருக்கான வர்த்தக கடனுதவி அமைப்பான ஹிஜ்ரா சிலாங்கூர் அறவாரியம் மேலும் ஆறு வாரங்களுக்கு ஒத்திவைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

வர்த்தகர்களில் பலர் இன்னும் கோவிட்-19 நோய்த் தொற்று தாக்கத்திலிருந்து மீளாமலிருப்பதை கருத்தில் கொண்டு இந்த சலுகையை நீட்டிப்பது குறித்து பரிசீலிக்கப்படுவதாக தொழில் முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.

கடனைத் திரும்பச் செலுத்துவதை ஒத்தி வைப்பதற்கு ஏற்கனவே வழங்கப்பட்டச் சலுகை இம்மாத இறுதியுடன் முடிவுக்கு வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு மேலும் ஆறு வாரங்களுக்கு அந்த சலுகையை நீட்டிக்கப்படுகிறது என்றார் அவர்.

கோவிட்-19 நோய்த் தொற்று பரவல் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வணிகர்களுக்கு தடுப்பூசி பெறுவதற்கான வாய்ப்பு இருந்தாலும் பொருளாதாரம் கண்ணிமைக்கும் நேரத்தில் மீட்சியடைந்து விடாது என்று அவர் மேலும் சொன்னார்.

இங்குள்ள செக்சன் 19, டி பல்மா தங்கும் விடுதியில் உள்ள தடுப்பூசி மையத்தில் மேற்கொள்ளப்படும் பத்து தீகா தொகுதிக்கான செல்வேக்ஸ் தடுப்பூசி செலுத்தும் இயக்கத்தை பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

# எல்.ஆர்.டி. கட்டுமானப் பகுதியில்
# இரும்பு சாரங்கள் சரிந்த சம்பவம்

ஷா ஆலம் – கிள்ளான், புக்கிட் திங்கியில் உள்ள எல்.ஆர்.டி. கட்டுமானப் பகுதியில் நேற்று இரும்பு சாரங்கள் சரிந்து விழுந்த சம்பவம் தொடர்பில் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை நடத்தி வரும் விசாரணைக்கு தாங்கள் முழு ஒத்துழைப்பை நல்கி வருவதாக அப்பகுதியில் கட்டுமானப் பணிகளுக்கு பொறுப்பேற்றுள்ள பெம்பினஹான் ஸீரா சென். பெர்ஹாட் நிறுவனம் கூறியது.

அப்பகுதியில் அனைத்து கட்டுமான நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்தும்படி தங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் அறிக்கை ஒன்றில் கூறியது.

இவ்விபத்தில் பலியானவரின் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களிடமும் அசௌகர்யத்திற்கு உள்ளான பொது மக்களிடமும் மன்னிப்பு கோருகிறோம் என அந்நிறுவனம் தெரிவித்தது. அந்த எல்.ஆர்.டி. கட்டுமானப் பகுதியில் நேற்று மாலை இரும்பு சாரங்கள் சரிந்து விழுந்த சம்பவத்தில் வங்காளதேச ஆடவர் ஒருவர் உயிரிழந்ததோடு மூன்று வங்காளதேச ஊழியர்களும் ஒரு இந்தோனேசிய ஊழியரும் லேசான காயங்களுக்குள்ளாகினர்.



# பிரதமருக்கு எதிராக அம்னோவின் நிலைப்பாடு
# அமைச்சர் பதவியை துறந்தார் சம்சுல்



கோலாலம்பூர் – அரசாங்கத்திற்கு வழங்கி வந்த ஆதரவை அம்னோ மீட்டுக் கொண்டதன் எதிரொலியாக எரிசக்தி மற்றும் இயற்கை வள அமைச்சர் பதவியை டத்தோஸ்ரீ டாக்டர் சம்சுல் அனுவார் துறந்துள்ளார்.

அம்னோ எடுத்த சில முடிவுகள் மற்றும் நிலைப்பாட்டைக் கருத்தில் கொண்டு கட்சிக்கு விசுவாசமாக இருக்கும் உறுப்பினர் என்ற முறையில் மத்திய அரசின் அமைச்சரவையிலிருந்து நான் விலகுகிறேன் என்று அவர் குறிப்பிட்டார். டான்ஸ்ரீ மொகிடின் யாசின் தலைமையிலான பெரிக்கத்தான் நேஷனல் கூட்டணிக்கு வழங்கிவந்த ஆதரவை அம்னோ மீட்டுக் கொண்டதைத் தொடர்ந்து லெங்கோங் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான அவர் இந்த அதிர்ச்சியூட்டும் முடிவை எடுத்துள்ளார்.

அம்னோவைச் சேர்ந்த எத்தனை அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து அரசாங்கத்தை ஆதரித்து வருகின்றனர் என்பது உறுதியாகத் தெரியவில்லை.

அம்னோவின் உச்சமன்றக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் தேசிய தலைவர் டத்தோ ஸ்ரீ ஜாஹிட் ஹமிட் அரசாங்கத்திற்கு வழங்கி வந்த ஆதரவை மீட்டுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் மாட்சிமை தங்கிய மாமன்னரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதாக கூறினார். எனினும், அந்த உறுப்பினர்களின் பெயர்களை ஜாஹிட் குறிப்பிடவில்லை. இருந்த போதிலும், அவர் முகநூலில் நேரலையாக வெளியிட்ட இந்த அறிவிப்பின் போது சில உறுப்பினர்கள் உடனிருந்தனர். அவர்களில் டத்தோஸ்ரீ நஜிப் துன் ரசாக், டான்ஸ்ரீ நோ ஓமார், டத்தோஸ்ரீ அஸாலினா ஓத்மான், துங்கு ரசாலி ஹம்சா, டத்தோஸ்ரீ அகமது மஸ்லான் ஆகியோரும் அடங்குவர்.

# பொது முடக்க காலத்தில் 7,444 வணிகர்களுக்கு வெ. 8.1 கோடி கடனுதவி




ஷா ஆலம் – நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காலத்தில் 7,444 வணிகர்களுக்கு 8 கோடியே 13 லட்சத்து 70 வெள்ளியை ஹிஜ்ரா சிலாங்கூர் அறவாரியம் கடனுதவியாக வழங்கியது. கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் இவ்வாண்டு ஜூலை மாதம் வரை மூலதன சுழல்நிதியாக இந்த கடனுதவி வழங்கப்பட்டதாக ஹிஜ்ரா சிலாங்கூர் அறவாரியத்தின் நிர்வாக இயக்குநர் டத்தோஸ்ரீ முகமது சுப்பாராடி முகமது நோர் கூறினார். பெருந்தொற்று காலத்தில் வணிகர்களுக்கு ஏற்பட்ட நிதிச்சுமையைக் குறைக்கும் நோக்கில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டதாக அவர் சொன்னார். ஹிஜ்ரா சிலாங்கூர் அறவாரியம் இரண்டாவது முறையாக மோரோட்டோரியம் எனப்படும் கடனைத் திரும்பச் செலுத்துவதை ஒத்திவைப்பதற்கான சலுகையை ஒன்றரை மாதத்திற்கு வழங்கியது. மேலும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள வணிகர்களின் வசதிக்காக கடனைத் திரும்பச் செலுத்துவதற்கான கால அட்டவணையையும் மறு சீரமைப்பு செய்துள்ளது என்றார் அவர்.

இந்த சலுகைகளைப் பெற விரும்புவோர் மாநிலத்திலுள்ள 20 ஹிஜ்ரா அறவாரிய கிளை அலுவலகங்களில் உள்ள அதிகாரிகளை தொடர்பு கொள்ளலாம். மேலும் www.hijrahselangor.com என்ற அகப்பக்கம் வாயிலாகவும் மேல் விபரங்கள் பெறலாம் என அவர் குறிப்பிட்டார். மற்ற வர்த்தகர்களும் இந்த ஹிஜ்ரா கடனுதவித் திட்டத்தின் வாயிலாக பயன்பெறுவதற்கு ஏதுவாக கடன் பெற்றவர்கள் தங்களின் தவணைப் பணத்தை முறையாக திரும்ப செலுத்தும்படியும் அவர் கேட்டுக் கொண்டார்.

# ஒலிம்பிக் போட்டியில் நாட்டிற்கு முதல் பதக்கம்

## பூப்பந்து வீரர்களுக்கு மந்திரி புசார் பாராட்டு

ஷா ஆலம் – தோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் முதல் வெண்கலப் பதக்கத்தை வென்ற முன்னணி இரட்டையர் பூப்பந்து ஆட்டக்காரர்களான ஏரோன் சியா–சோ ஊய் யிக் ஆகியோருக்கு சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.



பூப்பந்து போட்டியில் அந்த இரட்டையர்கள் முழு சக்தியையும் பயன்படுத்தி விளையாடியதோடு சிறப்பான ஆட்டத் திறனையும் வெளிப்படுத்தியதாக அவர் சொன்னார்.

இந்த இரட்டையர்களின் வெற்றி நமக்கு பெருமையை அளிக்கிறது. அவர்களின் இந்த வெற்றி மற்ற ஆட்டக் காரர்களுக்கு உத்வேகத்தையும் தன்னம்பிக்கையையும் அளிக்கும் என்பதோடு மலேசியா மேலும் அதிக பதக்கங்களைப் பெறுவதற்குரிய வாய்ப்பினையும் ஏற்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

உலகின் முதல் மற்றும் இரண்டாம் நிலையில் உள்ள இரு இரட்டையர் ஆட்டக் காரர்களையும் வீழ்த்தியது ஒலிம்பிக் போட்டியில் முதன் முறையாக களமிறங்கிய இந்த ஜோடிக்கு மறக்க முடியாத ஒரு இனிய அனுபவமாகும் என்றார் அவர்.

இந்த 2020 ஒலிம்பிக் போட்டி கடந்த மாதம் 23 ஆம் தேதி தொடங்கி ஒரு வாரம் கடந்து விட்ட நிலையில் இரட்டையர் பிரிவு பூப்பந்து போட்டியின் வாயிலாக ஏரோன் சியா–ஊய் யீக் அணி நாட்டிற்கு முதல் பதக்கத்தைப் பெற்றுத் தந்துள்ளது.

முஷாசினோ ஃபோரஸ்ட் அரங்கில் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இப்போட்டியில் இந்தோனேசியாவின் முகமது அஷான்–ஹெண்ட்ரா செத்தியாவான் ஜோடியை 17-21, 21-17, 21-14 என்ற புள்ளிக் கணக்கில் மலேசிய ஜோடி வெற்றி கொண்டது.

# மாற்றுத் திறனாளிகளுக்கு வெ. 500 உதவித் தொகை- 7,300 பேர் விண்ணப்பம்




ஷா ஆலம் – மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு உதவித் தொகையாக 500 வெள்ளி வழங்கும் திட்டத்திற்கு கடந்த சனிக்கிழமை வரை 7,300 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அவற்றில் 100 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு கடந்த வாரம் உதவித் தொகை வழங்கப்பட்டதாக யாவாஸ் அறவாரியத்தின் தலைமை நிர்வாகி கான் பெய் நீ கூறினார்.

இதர விண்ணப்பங்கள் தற்போது பரிசீலனையில் உள்ளதாகவும் அவற்றில் சில சம்பந்தப்பட்டத் தரப்பினரின் சான்றுக் கடிதங்களைக் கொண்டிராதது உள்பட நிபந்தனைகளை முறையாக பூர்த்தி செய்யாமலிருப்பதாகவும் அவர் சொன்னார். இதனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் ஆவணங்களை முழுமையாக அனுப்புவதற்கு ஏதுவாக விண்ணப்ப நாள் ஆகஸ்டு 9 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்றார் அவர். இத்திட்டத்தின் வாயிலாக பயன்பெறுவோரின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான சாத்தியத்தை பரிசீலிக்கும்படி தாம் மாநில அரசைக் கேட்டுக் கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இத்திட்டத்தின் வாயிலாக 1,200 மாற்றுத் திறனாளிகளுக்கு உதவ நாங்கள் திட்டமிட்டிருந்தோம். ஆனால், கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஊக்கமூட்டும் வகையில் உள்ளது. கோவிட்-19 பெருதொற்று தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக விண்ணப்பம் செய்துள்ளனர் என அவர் மேலும் சொன்னார்.

கடந்த ஜூன் மாதம் 9ஆம் தேதி மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி அறிவித்த கித்தா சிலாங்கூர் 2.0 உதவித் தொகுப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கான இந்த உதவித் திட்டம் இடம் பெற்றுள்ளது. சுமார் 1,200 மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகையாக தலா 500 வெள்ளி வழங்க வகை செய்யும் இத்திட்டத்திற்காக மாநில அரசு 6 லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது.

# தோக்கியோ ஒலிம்பிக்- ஓட்டப்பந்தய வீராங்கனை

## அஸ்ரின் நபீலா முதல் சுற்றுக்கு தேர்வு



தோக்கியோ – தோக்கியோ ஒலிம்பிக் 2020 போட்டியின் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் நாட்டின் மின்னல் வேக ஓட்டப்பந்தய வீராங்கனை அஸ்ரின் நபீலா அலியாஸ் முதல் சுற்றுக்குத் தேர்வானார். தோக்கியோ ஒலிம்பிக் அரங்கில் இன்று நடைபெற்ற 100 மீட்டர் போட்டிக்கான இரண்டாவது தேர்வுச் சுற்றில் அவர் தனது சொந்த சாதனையை முறியடித்து 11.77 விநாடிகளில் ஓடி இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

திரங்கானுவைச் சேர்ந்த 21 வயதான இந்த வீராங்கனையின் சொந்த சாதனை 11.92 விநாடிகளாகும். ஒலிம்பிக் போட்டியில் இவர் முதன் முறையாக தடம் பதித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் 100 மீட்டர் தொலைவை 11.76 விநாடிகளில் கடந்து ஈரானிய வீரர் ஃபர்சானா ஃபாஷிஹி முதல் இடத்தைப் பிடித்தார். குவைத்தை சேர்ந்த அல்ஷாமாரி முதாவி 11.82 விநாடிகளில் கடந்து மூன்றாம் இடத்தைப் பிடித்தார். ஒவ்வொரு பிரிவிலும் தேர்வாகும் முதல் மூன்று இடங்களை

Diterbit oleh Media Selangor Sdn Bhd Aras 11, Menara Bank Rakyat, No. 1, Jalan Indah 13/8, Seksyen 14, 40000 Shah Alam -Dicetak oleh POLARVISTA Sdn.Bhd. 15, Jalan 6/118C, Desa Tun Razak, 56000 Cheras, Kuala Lumpur. Tel: 03-91731434 Fax-03-91731412